Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு - 16 | 20 யூலை 2001 | விலை:- 10.00

ஒழுங்கும் கட்டுப்பாடும் உடையதே சுதந்திரம். அது அராஜகமல்ல.

# இப்போது இலங்கைக்கு தேவை

# புதிய அரசியல் யாப்பு

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்கள் பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணி எதிர்கொண்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நெருக்கடிகளை அடுத்து பாராளுமன்றம் செப்டம்பர் 07ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதோடு ஆகஸ்ட் 21ம் திகதி புதிய அரசியல் அமைப்பு ஒன்று தேவையா? இல்லையா? என்ற ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதெனவும் அறிவித்துள்ளார். சர்வசன வாக்கெடுப்பின் பின்னர் அடுத்த கட்டம் என்பது இப்போதைக்கு ஊகங்களே.



இங்கு நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கம் எதிர்நோக்காமல் இந்த அறிவிப்புக்களை மேற்கொண்டது சரியா பிழையா என்ற ஆய்வை ஒருபக்கம் ஒதுக்கிவைத்துவிட்டு இந்த நாட்டுக்கு "புதிய அரசியல் யாப்பு" ஒன்று தேவையா? இல்லையா? என்பதை அலசுவதே தமிழர் தரப்புக்குப் பொருத்தமானதாக இருக்கும்.



இங்கு ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு குழுவும் தமது நலன்களிலிருந்தும் தாம் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரிவினரின் நலன்களிலிருந்துமே பிரச்சினைகளை அணுகுகின்றன.



இந்த நாட்டில் கடந்த பல தசாப்தங்களாக நிலவிவரும் இனமுரண்பாட்டினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தரப்பிலிருந்தும், இந்நாட்டில் கடந்த இருபது ஆண்டு காலமாக நிகழ்ந்த மிகமோசமான மனித உரிமை மீறல்கள், ஜனநாயக விரோத நடவடிக்கைகள், இரத்தகளரிகள், தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் ஆகியவற்றின் பின்புலன்களிலிருந்து இந்த புதிய அரசியலமைப்புக்கான கோரிக்கையைப் பார்க்க வேண்டியுள்ளது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அதர்மசக்கர ஆட்சி பல்லாயிரம் மக்களின் இரத்தத்தால் தோய்ந்த ஒன்று. அதற்குப் பின்னர் வந்த ஆர். பிரேமதாசாவின் ஆட்சி எதேச்சாதிகார சர்வாதிகாரத்தின் உச்சமாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலம் பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின். தொடர்ச்சி 02பக்கம்



பிரிந்தவர் இருவரும் ஒருமுறை சேர்ந்தார். பின்னரும் சேருவரோ!

## பாலுணர்வு வெறி ஒழியட்டும்

மருதானை சோதனைச் சாவடியிலிருந்து அல்லாரை மற்றும் இளவாலை வரை அண்மைக் காலமாக அடுத்தடுத்து பாலியல் வன்முறைகள் வடக்கு-கிழக்கிலும் தெற்கிலும் தமிழ்ப் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெண்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இந்த வன்முறைகள் பெண்களின் உரிமைகள் பற்றி மாத்திரமல்ல, அடிப்படை மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய அச்சமூட்டும் நிலைமைகளின் வெளிப்பாடுகளாகும்.

இச்சம்பவங்கள் பாலுணர்வு வெறியின் விளைவுகள் என்பதற்கு மேலாக இந்த நாட்டில் நிலவுகின்ற இனரீதியான மேலாண்மை வெறியின் விளைவென்றே கருதவேண்டியுள்ளது. இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நீதி மன்றங்களாலும், சட்டங்களாலும் மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய நிறுவனங்களாலும் தடுத்து நிறுத்த முடியாது போவதனால் இந்த நிறுவனங்கள் மீதுள்ள அற்பசொற்ப நம்பிக்கையையும் மக்கள் இழந்து கொண்டிருக்கின்றனர்

அரசாங்கமும், சமூக நிறுவனங்களும் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், கல்முனையில் பொலிஸார் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினால் இரு மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த நாட்டில் துப்பாக்கி ஏந்தியிருப்பவர்கள் இனவேறு பாடுகளுக்கும் அப்பால் மனித உரிமைகளை எவ்வளவு தூரம் மலினமாகக் கருதுகிறார்கள் என்பதையே இச்சம்பவமும் காட்டுகிறது.

துப்பாக்கி ஏந்திய பொலிசாரும் இராணுவத்தினரும் யார் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம் என்ற மேலாண்மை அதிகாரம் தொடர்ந்தும் நிலவுவது மேலும் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். சட்டபூர்வமான நிறுவனங்கள் அராஜகமாகச் செயற்படத் தொடங்கிவிட்டால் பின்னர் நாட்டில் சட்டவிரோதமான நிறுவனங்கள் ராஜாங்கம் நடத்துகின்றன என்பதே அர்த்தமாகும்.

எனவே, அரசாங்கம் உடனடியாக இவ்விடயத்தில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் இப்போது சட்டபூர்வமான நிறுவனங்களைக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குடன் செயற்பட வைப்பது உடனடி அவசியத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது என்பதை உணர்ந்து இடதுசாரி, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் அனைவரும் ஒருமுகமாகச் செயற்பட வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறோம்.

- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பாக

அ. வரதராஜப்பெருமாள் வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்.

## இமயம் சாய்ந்ததோ!



தமிழ் கலையுலகில் நடிப்பின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. அவருடைய குடும்பத்தாரோடும் தமிழக மக்களோடும் நாமும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## பாலியல் பலாத்காரம் காட்டுமிராண்டித்தனம்

யாழ்ப்பாணம், புங்குடுதீவு, மன்னார், மருதானை, அல்லாரை, இளவாலை என தொடர்ச்சியாக நடைபெற்று வரும் பாலியல் பலாத்காரங்கள் தடுத்து நிறுத்தப்படாமல் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றமை மிகவும் விசனத்துக்குரியவையாகும். அரசாங்கமும், அரசியல்-சமூக நிறுவனங்களும் இந்தக் காட்டுமிராண்டித் தனத்தைப் பூண்டோடு அழிப்பதற்கான நடவடிக்கைகளில் உணர்வுபூர்வமாக ஈடுபடவில்லை என்பதையே காட்டுகின்றது. இதுவும் தமிழருக்கு மட்டுமே உரிய ஒரு பிரச்சினையாகப் புறக்கணிக்கப்படுகின்றமை பெரும் ஆபத்துக்களையே விளைவிக்கும்.

இவ்வாறான நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்களை விட இந்தப்பாவத்தைப் புரிபவர்களைப் பாதுகாக்க முற்படும் முனைப்புக்கள் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றன என்றே உணர முடிகின்றது. பாலியல் பலாத்காரங்களில் ஈடுபட்டவர்கள் சார்பாக அரசாங்கத் தரப்பு வக்கீல்கள் வாதிடுவது பல சந்தேகங்களைக் கிளப்புகிறது. இவ்வாறான பாதகங்களில் ஈடுபடும் இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்க இராணுவச் சட்டங்களும், இராணுவ நீதிமன்ற முறைகளும் இருக்கின்றன. ஆனால். அவை பிரயோகிக்கப்படாமல் இங்கே சுலபமாகத் தப்பித்துக் கொள்ளக்கூடிய சட்டங்களின் கீழ் சாதாரண நீதிமன்றங்களில் நிறுத்தப்படுகின்றமையும் பல சந்தேகங்களைக் கிளப்புகின்றன. பாலியல் வன்முறைக் காட்டுமிராண்டித் தனங்களை இரும்புக்கரம் கொண்டே கட்டுப்படுத்துதல் வேண்டும்.

அரசியல் போராட்டங்களை அடக்குவதற்கு மிகக்கடுரமான சட்டங்களைக் கொண்ட இந்த நாட்டில் பாலியல் வன்முறைகளைத் தடுக்கமட்டும் மிக மென்மையான சட்டங்களைப் பயன்படுத்துவதன் அர்த்தம் என்ன? பெண்கள் உரிமைக்குக் குரல் எழுப்பும் அரசியல் நிறுவனங்களும் சமூக நிறுவனங்களும் இந்தப் பாலியல் பலாத்காரங்களுக்கு எதிராக வெறுமனே சம்பிரதாய எதிர்ப்புக்களோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் உறுதியான போராட்டங்களை தொடர்ச்சியாக, பெண்கள் சமூகத்தின் பெரும் கிளர்ச்சியாக நடாத்துதல் வேண்டும்.

## சர்வசன வாக்கெடுப்பு

புதிய அரசியல் யாப்புக்கான சர்வசன வாக்கெடுப்பு தொடர்பாக தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்ன நிலைப்பாடு கொள்ளப்போகிறார்கள் என்பது இப்போது பிரதானமானதாக உள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் புதிய அரசியல் யாப்பு முக்கியமானது என்பதை எந்தத் தமிழ்க் கட்சியும் மறுக்கவில்லை. ஏனெனில் தமிழ்ப் பேசும் மக்கள் தரப்பிலான அனுபவங்களும், தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்துள்ள விடயங்களும் புதிய அரசியலமைப்பின் தேவையை உறுதிப்படுத்துவதாகவே உள்ளன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை சரியாகக் கையாள வேண்டுமாயின், தற்போதைய நெருக்கடி நிலையையே அதற்கான தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டுக்கும் மக்களுக்கும் பொதுவாக ஜனநாயகத்துக்கும் பாதகமான 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பை பாரம்பரியமான முறைகள் மூலம் மாற்ற முடியாது என்பதே இதுவரையான அனுபவம் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. ஜனநாயகத்தை நிராகரிப்பதற்காக இந்த அரசியல் யாப்பு கொண்டுள்ள சில சரத்துக்களைப் பயன்படுத்தியே புதிய அரசியல் யாப்பை உருவாக்க முடியும்.

இங்கு ஆட்சியாளர்களை மட்டும் மாற்றுவதால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. ஒற்றையாட்சியை மாற்றத் தயாராக இல்லாத, பாலியல் பலாத்காரங்கள் தொடர்பாகக் கூட எதிர்ப்புத் தெரிவிக்கத் தயாராக இல்லாத ஐ.தே.க.வினர் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளுக்குத் தீர்வு காண்பார்கள் என்று மீண்டும் எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமானதாகும். தமிழ் பேசும் பிரதிநிதிகள் இது தொடர்பாக தெளிவான சிந்தனையுடனும், குறுகியகால லாப நோக்கங்களைக் கைவிட்டும் செயற்பட வேண்டும்.

## கழுத்தைத் திருகும் பொருளாதார நெருக்கடி பொருத்தமான நடவடிக்கைகள் அவசியம்

பிரித்தானியரிடமிருந்து விடுபட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. உண்மையான அந்நியச் செலாவணி வருமானத்தைக் கணக்கிட்டால் ஆடையுற்பத்திகளினதும், பெற்றோலிய உற்பத்திகளினதும் வருமானம் மிகச் சிறிய அளவே. வெளிநாடுகளுக்குப் போய்த் தொழில் செய்யும் இலங்கையர்களின் வருமானம் ஒன்றே குறிப்பிடத்தக்க புதிய தோற்றமாகும். புதிதாக கைத்தொழில் அபிவிருத்தியடைந்த கிழக்காசிய நாடுகளை அண்மித்ததாக இலங்கை உள்ளது என்பது பொய்யாகும்.

திறந்த பொருளாதாரம், நிதி மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள், தாராளமயமாக்கம் போன்ற நடவடிக்கைகளெல்லாம் ஒரே பொருளாதாரக் கொள்கையின் பாகங்களே. பேரினவாதக் கலவரங்கள், 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு இவற்றின் மூலமே ஜெயவர்த்தனா இப்பொருளாதார அம்சங்களைப் புகுத்தினார். இலங்கை சிங்கப்பூராகும் என்றார். ஹொங்கொங் சீனாவுக்குப் போகும் போது அங்குள்ள வெளிநாட்டு மூலதனங்களெல்லாம் இலங்கைக்குள் வரும் என்று ஐ.தே.க.புத்திஜீவிகள் அதிகப் பிரசங்கம் செய்தார்கள். ஆனால் இலங்கை மேலும் மேலும் நெருக்கடிகளைச் சமாளிக்கும் பொருளாதாரத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

இன்றைக்கும் இலங்கையின் எண்பது சதவீதமான மக்களின் இரண்டு வேளை உணவு அமெரிக்காவின் உதவியில் கிடைக்கும் மாவிலும் தேங்காய்ச் சம்பலிலுமே தங்கியிருக்கின்றன. இந்த இரண்டும் இல்லையென்றால் இந்த நாட்டின் ஐம்பது சதவீதமான மக்கள் பட்டினிச் சாவுக்கு உள்ளாவார்கள் என்ற நிலையை அடையாளம் கண்டு கொள்ளத் தவறினால் இந்த நாடு மேலும் மிகப் பாதகமான நிலையை அடைவது தவிர்க்க முடியாததாகும். அரசாங்கச் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், அந்நியச் செலாவணி வீதங்களைச் சந்தைக்கு விட்டுவிடல், வங்கி வீதங்களை மாற்றியமைத்தல் ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகமாட்டா.

இன்னமும் மூன்றிற்கு இரண்டு பங்கு சனத்தொகையைக் கொண்டுள்ள கிராமிய விவசாயப் பொருளாதாரத்தில் அமைப்புரீதியான மாற்றங்கள் வேண்டும், பொருத்தமான முறையில் தொழில்ரீதியான பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த வேண்டும். பொருளாதாரச் செயற்பாடுகளில் நிலவும் அராஜகப் போக்கை நிறுத்த நாட்டின் பொருளாதாரம் முழுவதுவும் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமிடலுக்கும், ஒருங்கிணைப்புக்கும் உள்ளாக்கப்படல் வேண்டும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மாற்றங்களுக்கும் ஏற்படவுள்ள புதிய மாற்றங்களுக்கும் உரிய வகையான வரி முறைகளையும், வரி அறவிடும் பொறிமுறைகளையும் மாற்றியமைத்தல் வேண்டும், பொருளாதார வளர்ச்சியில் தொழிலாளர்களுக்கும் மற்றும் உழைப்பவர்களுக்கும் உரிய பங்கு தொடர்ச்சியாகக் கிடைக்க வழிவகை செய்தல் வேண்டும். இவற்றை விடுத்து வெறுமனே புரையோடிப் போன புண்ணுக்குப் புனுகு தடவுவது போன்ற பொருளாதார நடவடிக்கைகள் பயனற்றவையாகும்.

# இப்போது இலங்கைக்கு தேவை புதிய அரசியல்.............

01ம் பக்கத் தொடர்ச்சி

புதைகுழிகளின் மீதே உருண்டு வந்தது. இன்றிருக்கும் ஆட்சி கூட தான் கொடுத்த வாக்குறுதிகளை உரியகாலத்தில் நிறைவேற்றாமல் காலம் கடத்தியே வந்தது.

இவையெல்லாம் 1978 அரசியல் யாப்பின் விளைவுகள் என்றால் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

இனக்கலவர நெருப்பிலேதான் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இந்த நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கையை இரும்புக்கரம் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு. அடுத்த வருடமே பயங்கரவாத தடைச்சட்டம் அமுலுக்கு வந்து பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை இரவோடிரவாகப் பலியெடுத்தது. பல்லாயிரக் கணக்கான இளைஞர்களை கேள்விக்கிடமின்றி கொடுஞ் சிறைகளுக்குள் தள்ளியது. மூன்று வருடங்களில் யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்தது.

ஐந்து வருடங்களில் இந்த நாட்டின் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமான 1983 இனப்படுகொலை நடைபெற்றது. இந்த யாப்பின் கீழ் தான் இடதுசாரி கட்சியினர் மீதும், ஜே.வி.பியினர் மீதும், விஜயகுமாரதுங்கா மீதும் நக்சல்பாரி சதிப்புரளி எனக்கிளப்பிவிடப்பட்டது. பல இடதுசாரிகள் சிறையில் தள்ளப்பட்டதற்கும், வேலை நிறுத்தத்தை மேற்கொண்ட ஒன்றரை இலட்சம் தொழிலாளர்கள் ஒரே நாளில் வேலையை விட்டு துரத்தப்பட்டதற்கும், அதனால் பல தொழிலாளர்கள் வறுமைக் கொடுமை தாங்க முடியாமல் நச்சருந்தி தற்கொலை செய்து கொண்டதற்கும் இந்த எதேச்சதிகார அரசியல் யாப்பு பங்களிப்பு செய்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு மக்களின் அபிலாசைகளை ஈடுசெய்யும் வகையில் தீர்வு காண்பதற்கு பெரும் தடையாக இருப்பதும் இந்த அரசியல் யாப்பே. பொது ஜன முன்னணி அரசினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் நிறைவேற்ற முடியாமல் போனதற்கும், ஏன் 1988ல் நிறுவப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண அரசு 1990லேயே கலைக்கப்பட்டதற்கும் இந்த அரசியல் அமைப்பு காரணமாக இருந்திருக்கிறது.

மொத்தமாக இன்று நாடு இராணுவ மயமானதற்கும், உள் நாட்டு யுத்தத்தில் இருந்து நாடு மீள முடியாமைக்கும் மேலும் பாதாள உலக கோஷ்டிகள் மற்றும் மாபியாக் கும்பல்களின் கூடாரமாகியதற்கும் இந்த அரசியல் யாப்பே காரணமாக இருந்து வந்திருக்கிறது.

இந்த அரசியல் யாப்பானது விகிதாசாரத் தேர்தல் முறை மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பாராளுமன்றத்தில் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு உயர்த்தி இருக்கிறது என்பதுவும் அத்துடன் சிறு சிறு கட்சிகளுக்கும் அங்கத்துவம் பெற வாய்ப்பளித்திருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. இலங்கை வம்சாவழித் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் பற்றிய விடயத்தில் எந்த லாபத்தையும் 1978ம் ஆண்டு யாப்பு தரவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இன்னும் சொல்லப் போனால் இரண்டு தமிழர்கள் தெரிவு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்டத்தில் இன்று ஒரு தமிழரும் தெரிவு செய்யப்படாமற் போனதையும், தமிழ் கட்சிகள் கட்டாயமாக ஒன்றுபடாவிட்டால் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்ப்பிரதிநிதித்துவம் கூட வர முடியாத நிலை இருப்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

மேலும் இந்த நாட்டில் ஆக்கபூர்வமான எந்த காரியத்தையும் செய்யவிடாமல் ஒரு பிணியாகத் தொடர்வது இந்த அரசியல் யாப்பாகும். எனவே இந்த சாபம் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்பதில் எந்த மறுகருத்தும் இருக்க முடியாது. கட்சிகளின் தனிப்பட்ட கோபதாபங்கள் மக்களின் நீண்டகால நலன்களுக்கு விரோதமானதாகிவிட இடமளிக்கக் கூடாது.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-


E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த நண்பர்களே!

## அன்பார்ந்த நண்பர்களுக்கு

அ. வரதராஜப்பெருமாள்

எழுதும் கடிதம் ~ 11

அன்பார்ந்த நண்பர்களுக்கு என் முதல் வணக்கம்.

பதினொன்றாவதாக எழுதும் எனது இந்தக் கடிதத்தைத் தொடங்க முதல் உங்களோடு ஒரு விடயத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது, நான் தொடராக எழுதும் இந்தக் கடிதங்கள் கட்சியின் உறுப்பினர் மத்தியில் மட்டுமல்ல நண்பர்கள் மத்தியிலும் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் மத்தியிலும் தமிழ்ச் சமூகத்தின் மீது உண்மையான அக்கறை கொண்ட தமிழர்கள் மத்தியிலும் ஓர் ஆர்வத்தைத் தூண்டியிருக்கின்றது என்று உள் நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பல நண்பர்கள் நேரடியாகவும், வேறு நண்பர்களூடாகவும் அறிவித்து வருகின்றமை என் மனதில் உள்ளூர பெருமகிழ்ச்சியைத் தருகிறது. எந்த நோக்கங்களுக்காக இந்தக் கடிதத் தொடரை எழுதத் தொடங்கினேனோ அந்த நோக்கங்களை 'மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருவிப்பாயும்', 'எறும்பூரக் கற்குழியும்' என்பன போல இந்தக் கடிதங்கள் ஆக்குவதையிட்டு என் உள்ளம் குளிர்வது இயல்பே. இதேவேளை இந்தக் கடிதத் தொடர் மேலும் ஆக்கபூர்வமானதாகவும், சமூகரீதியில் தர்க்கபூர்வமானதாகவும் அமைய உங்கள் ஒவ்வொருவரினதும் உருப்படியான யோசனைகளையும், உளமார்ந்த ஆதரவையும் வேண்டுகிறேன்.

இது ஒருபுறமிருக்க, நாட்டின் அரசியல் நிலைமைகளைப் பார்க்கின்ற போது, நாட்கள் நகரும் வேகத்திலும் பார்க்க கடந்த சில வாரங்களாக இங்கு அரசியல் நிலைமைகளின் புதினங்கள் திடீர், திடீர் மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன. ஹக்கீம் அவர்கள் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டமை, முஸ்லீம் காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத்தைவிட்டு வெளியேறியமை, எதிர் கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை மிகுந்த நம்பிக்கையுடன் முன்னறிவித்தமை, ஹக்கீம் எந்தப் பக்கம், ஜே.வி.பி எந்தப் பக்கம் என்று தெரியாமை என பாராளுமன்ற அரசியல் அதிகார நெருக்கடி விரிவடைந்தது.

அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது சந்தேகத்துக்குரியதெனக் கண்டதும் அச்சட்டத்தைக் கைவிட்டு பயங்கரவாதத் தடைச்சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம், ஜனாதிபதிக்குள்ள விசேட அதிகாரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டத்தின் தேவைகளை அது இல்லாமலேயே நிறைவேற்றிக் கொண்டது.

தமிழ்க் கட்சிகள், முஸ்லீம் கட்சிகள், ஜே.வி.பி, மற்றும் இடதுசாரிக் கட்சிகள் போன்றவை அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பது புரிந்து கொள்ளப்படக் கூடிய ஒன்று. 17 வருடங்கள் அவசரகாலச் சட்டத்துக்குக் கீழேயே தனது ஆட்சியை நடத்திய ஐ.தே..க அதை எதிர்ப்பதுதான் வேடிக்கையானது. தனது ஆட்சிக் காலத்தில் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவளிக்காத கட்சிகளையெல்லாம் தேசத் துரோகிகள் என்று பட்டம் சூட்டிய ஐ.தே.க. இப்போது எதிர்ப்பது வெறும் அரசியல் பம்மாத்தே தவிர வேறொன்றுமில்லை. ஐ.தே.க இன்னொருமுறை அதிகாரத்துக்கு வந்தாலும் அவசரகாலச் சட்டத்தின் கீழேதான் ஆட்சி செய்யும். அதில் எந்த சந்தேகமுமில்லை.

இந்த நாட்டில் ஆளும் கட்சியாய் இருப்பவர்கள் புலிகளை ஒழிப்போம், அழிப்போம் என்று சொல்லுவதும் பின்னர் எதிர்கட்சியாக வந்தவுடன் புலிகளுடன் செல்லங் கொஞ்சுவதுவும் வழமையாகிவிட்டது. இதனால்தான் மக்கள் புலிகள் விடயத்தில் யாரையும் நம்பத் தயாராக இல்லாமற் போனதற்குக் காரணமாகும்.

யாராவது புலிகளை நிச்சயமாக அழித்து விடுவார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினால், அவர்கள் யாராக இருந்தாலும் மக்கள் புலிகளை எதிர்க்க ஆரம்பிப்பார்கள். அந்த நம்பிக்கை இன்னும் யாராலும் வழங்கப்படவில்லை. புலிகள் அவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையில் உயிர் வாழவில்லை. மாறாக புலிகளை முற்றாக அழித்துவிடக் கூடியவர்களை மக்கள் காணாததாலேயே மக்கள் மத்தியில் புலிகள் இன்னமும் உயிர்வாழ்கிறார்கள். புலிகளை ஆதரிப்போர் பலரும் அந்த அடித்தளத்திலேயே ஆதரிக்கிறார்கள். இன்றைக்குப் புலிகளின் இசைக்குத் தாளம் போட்டு எழுதும் பத்திரிகை எழுத்தாளர்கள் அனைவரும் தலைகீழாக மாறி தாங்கள் அப்போதே சொன்னதாகவும், பாசிசம் பற்றி தமிழ் மக்களை எச்சரித்ததாகவும், புலிகள் அப்படிச் செய்தார்கள், இப்படிச் செய்தார்கள், பிரபாகரன் அப்படி இப்படி என நாங்களே சொல்லக் கூசுகின்ற அளவுக்கு எழுதத் தொடங்கி விடுவார்கள். அப்போது நாங்கள் "புலிகளின் ஆக்கபூர்வமான பங்களிப்பையும் நிராகரிக்கக்கூடாது" என்று சொன்னால் எமக்கே பாசிச ஆதரவாளர்கள் என்று பட்டம் கட்டுவார்கள். அந்தளவுக்கு மோசமான பேர்வழிகளின் ஆதரவில்த்தான் புலிகள் உயிர்வாழ்வு இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. .

புலிகள் இந்த நாட்டின் அரசியலில் வடக்கு-கிழக்கு அரசியலில் மட்டுமல்ல, தெற்கின் அரசியல் தொடர்பாகவும் குறிப்பாக சுமார் கடந்த பத்து ஆண்டுகளாக நிர்ணய இராணுவ சக்தியாக உள்ளார்கள் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இதைப் பயன்படுத்தி தமிழ்பேசும் மக்களின் நலன்களுக்கும் இந்த நாட்டில் சமாதானம், முன்னேற்றம் ஏற்படுவதற்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பை ஆற்ற முடியும். ஆனால் இது புலிகளால் நடாத்தப்படமாட்டாது. புலிகளுக்கு இருப்பது அழிக்கும் ஆற்றல் மட்டுமே. ஆக்கபூர்வமான விளைச்சலை ஒரு பிடியளவுக்குக் கூட அவர்கள் எடுக்கமாட்டார்கள். இதுபற்றி ஏற்கனவே நான் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கிறேன்.

அதேவேளை புலிகள் இராணுவ ரீதியாக வல்லமையுடையவர்களாக இருக்கும் வரை ஏனைய தமிழ் கட்சிகளுக்கு பேரம் பேசும் சக்தி என்பது கிடைக்கமாட்டாது. இப்போது டக்ளஸ் தேவானந்தாவுக்கு கிடைத்திருப்பது அபூர்வ சந்தர்ப்பமே. ஆனால் அதுவும் வரையறுக்கப்பட்டதே. அதனை அவர் தனது தேர்தற் செல்வாக்கை விரிவுபடுத்திக் கொள்ள மட்டுமே பயன்படுத்துவதனால் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளோடு அது தொடர்பு பட்டதாக இல்லை.

இந்தச் சூழ்நிலையில் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான தீர்வு தொடர்பாக இங்கு பெரும்பான்மையான சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்ற சிங்களத் தலைவர்கள் எவ்வளவைத் தரத் தயாராக இருக்கிறார்களோ அதை புத்திசாலித்தனமாகப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. சுயமறுப்பால் எதுவும் இல்லாமற் போவது மட்டுமே உண்மையாகும்

புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட முடியாது. அது அவர்களின் உயிர்வாழ்வுக்கு அவசியமாகிப் போய்விட்டது. வெளிநாடுகளில் உள்ள பெரும் தொகையான தமிழர்கள் அந்நாடுகளில் தாங்கள் உறுதியான நிரந்தர குடியுரிமையைப் பெறும்வரை இலங்கையில் இனப்பிரச்சினை சாதகமான முறையில் தீர்க்கப்படக்கூடாது என உள்ளனர். இலங்கையில் இருக்கின்ற தமிழர்களில் பெரும் எண்ணிக்கையினர் கனடாவுக்கோ அல்லது, மேற்கு ஐரோப்பிய நாடொன்றுக்கோ தாங்கள் விரைவாகப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்பதற்காகத் தமிழீழம் கேட்கிறார்கள். உள்ளூரிலுள்ள வர்த்தகர்கள், வெளிநாடுகளுக்கு ஆளனுப்பும் தொழில் செய்யும் ஏஜென்சிக்காரர்கள் அரசியற் தலைமை இருக்கக்கூடாது என்று கருதும் அரசாங்க நிர்வாகிகள் இவர்களெல்லாம் தமிழீழமே தமது மூச்சு என்கின்றனர். கொழும்பில் நிரந்தர வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ள, அதற்காக இப்போதும் முயற்சித்துக் கொண்டிருக்கிற தமிழர்களில் பெரும்பான்மையோருக்கு தமிழீழம் தேவையில்லை. ஆனால் புலிகள் சண்டை பிடித்துக் கொண்டே இருக்க வேண்டும். பொடியன்களும், ஆமிக்காரர்களும் சண்டையில் செத்துக் கொண்டேயிருக்கவேண்டும் அப்போதுதான் தமக்கு கொழும்பில் பாதுகாப்பு என்று கருதுகிறார்கள்.

### அன்பு நண்பர்களே!

இங்கு கோரப்படும் தமிழீழம் வரலாற்று ரீதியான அரசியல், சமூக, பொருளாதார உளவியற் காரணங்களைக் கொண்ட தேசிய இனம், தேசம், தேச விரோதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதாக இப்போது இல்லை. இப்போது உள்ளதெல்லாம் போலித்தனம். உதட்டளவில் வரும் பிழைப்பு சுலோகங்களே, சொந்த சமூகத்தை ஏமாற்றும் போக்கிரித்தனமே.

ஆனால் வடக்கில், கிழக்கில் பல லட்சம் மக்கள் அரசியற் தீர்வோ, இல்லையோ தங்களுக்கு சமாதானம் வேண்டும், நிம்மதியான வாழ்க்கை வேண்டும், பாதுகாப்பாக நடமாடும் சுதந்திரம் வேண்டும் என்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு இந்த யுத்தத்தால் துன்பங்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை. வெளிநாடு செல்ல வாய்ப்பில்லை, இலாபம், கொள்ளையிட வாய்ப்பில்லை, ஆற்றலில்லை. இவர்களின் நிலையை எண்ணிப் பார்ப்பார் மிகச் சிலரே. இவர்களுக்கு உதவி செய்யவெனச் செயற்படும் தொண்டர் நிறுவன உரிமையாளர் பலர் துன்பப்படும் மக்களின் பெயர்களைச் சொல்லி தமது சொந்த வளங்களைச் சேர்த்துக் கொண்டார்கள்.

இந்த நிலையில் எம்மைப் பொறுத்தவரையில் ஒரு குறைந்த பட்ச அரசியற் தீர்வாவது உருவாக வேண்டுமென்பதே. அது எப்படி வந்தாலும் பரவாயில்லை.

இப்பொழுது ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பை நடாத்தவுள்ளார். எப்போதோ மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய ஒன்று . இப்போதாயினும் நடக்கவுள்ளதே என்று திருப்திப்படுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

இது ஏன்? எப்படி? எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்கின்ற ஆராய்ச்சிகளும் விவாதங்களும் அர்த்தமற்றவையாகும். பாராளுமன்றத்தை ஒத்திவைத்ததன் மூலம் சந்திரிக்கா ஜனநாயகத்தை புதைகுழியில் இட்டுவிட்டதாக ஐ.தே.கவும் அதற்குத் துணையாக நிற்கும் கட்சிகளும் கூறுகின்றன. அது அப்படியே இருக்கட்டும். அதுவல்ல இப்போது எமக்குப் பிரதானம். அரசின் அப்படியான ஒரு பிழையான தேவை சரியான ஒரு விடயத்துக்கு வழி வகுக்குமாக இருந்தால் அதைப் பயனபடுத்துவதே எமக்குப் பிரதானமான விடயம்.

இப்படி ஒரு நிலைமை 1976ன் இறுதிப் பகுதியிலும் ஏற்பட்டது. அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி ஆளும் குழுக்களின் முரண்பாட்டைப் பயன்படுத்திதான் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ்மக்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு செயற்பட்டிருந்தால், அப்போதே இப்போது பேசப்படும் பிரதேச சபையைப் பெற்றிருக்கலாம். ஆனால் இலங்கையின் ஜனநாயகம் என்ற பெயரில் தமிழர் கூட்டணி ஐ.தே.க.வுக்கு ஆதரவாகச் செயற்பட்டதால் கடைசியாக இந்த நாட்டில் இருந்த ஜனநாயகமும் சீரழிந்தது. அதைவிட மேலாக தமிழ் மக்கள் அழிந்து போனார்கள். அதே வரலாற்றுத் தவறை மீண்டும் இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியும் வரலாறு தெரியாத, வரலாற்றின் மீது அக்கறையில்லா தமிழ்க்கட்சிகள் சிலவும் கூட்டாகச் சேர்ந்து செய்து கொண்டிருக்கின்றன.

### அன்பார்ந்த நண்பர்களே!

தமிழர்கள் மத்தியில் வெள்ளைக்கார நாடுகளுக்குப் போய்ச் சேருவதற்காக அல்லது கொழும்பில் பாதுகாப்பான, வசதியான வாழ்க்கை வாழுவதற்காகத்தான் அல்லது சுலபமாக சுரண்டிக் கொழுப்பதற்காகத்தான் தமிழீழம் கேட்கப்படுகின்றது என்ற நிலை செல்வாக்கு மிக்கதாக இருக்கும் வரை அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

எது அன்றைக்கு செல்வாக்கு மிக்கதாக இருக்கிறது என்று பார்த்து அதில் குளிர் காயும் அரசியலை கடந்த முப்பது வருடங்களில் ஒரு நாளும் நாங்கள் செய்ததில்லை. எதிர் நீச்சலேதான் எமது முழு அரசியல் வாழ்க்கையாக அமைந்து போனாலும் அதற்காக பெருமைப் படுபவர்கள்தான் நாங்கள்.

தமிழ் மக்களுக்கு இன்றைக்கு எது சரியானது? எது அவசியமானது? எது சாத்தியமானது? என்பதை அடையாளம் கண்டு அதில் நேர்மையாகவும் உண்மையாகவும் ஈடுபடுவோம். மக்கள் மத்தியில் நாம் சுதந்திரமாக நடமாடவும், மக்கள் எம்மை நோக்கி சுதந்திரமாக ஈடுபடவுமான நாள் வரட்டும். மக்களின் உண்மையான அபிப்பிராயம் என்ன என்பதை நாம் வெளிப்படுத்திக் காட்டுவோம். தமிழ் மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களை அங்கீகரிக்காதவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறுவது கேலிக்கூத்தாகும்.

தமிழ் மக்கள் தமது இனத்தவர் மத்தியில் சுதந்திரமாகப் பேசும் நாள், நடமாடும் நாள் எந்நாளோ அந்நாளே தமிழர்கள் இந்த நாட்டில் சிங்கள மக்களுக்குச் சமமாக வாழும் உரிமைக்கான ஜனநாயகப் போராட்டம் மீண்டும் ஆரம்பமாகும்.


அந்நாளுக்காக உழைப்பதே இப்போது உண்மையான தமிழ் சக்திகளுக்கான கடமையெனக் கூறி இக்கடிதத்தை முடிக்கிறேன். அடுத்த இதழில் மீண்டும்.

இப்படிக்கு
உங்கள் நண்பன்
வரதராஜப்பெருமாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய வீடு போக எங்களை விடு

பச்சைத் தண்ணீர் என்றாலும் எங்களுடைய வீட்டில் இருந்து குடிப்பது போலாகுமா? என்பதே தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் ஏக்கம். தமது வீடு வாசல்களை போய் பார்க்க வேண்டும். சீரழிந்து சிதைந்து போகாமல் பாதுகாக்க வேண்டும் என்பதே.



அவர்கள் தங்களை அனுமதிக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கை ஒரு புறமும் எமது அறிவித்தல் கிடைக்கும் வரை திரும்பிச்செல்லக் கூடாது என்ற அன்புகலந்த அச்சுறுத்தல் மறுபுறமுமாக இருக்க இடையில் அல்லாடுகிறார்கள் இடம்பெயர்ந்த மக்கள்.

அவர்கள் சொல்லிப்போட்டார்கள் பிறகு அங்கை போய் மாட்டுப்படப் போறியள் என்ற வாசகத்தால் துணுக்குற்று மனம் தளர்ந்து வீடு திரும்பும் முயற்சியை கைவிட்டவர்கள் பலர்.


ஓடியாடி அலுவல் பார்க்கத் தெரிந்தவர்கள் இராணுவத்தினரின் அனுமதி பெற்று மிஞ்சியிருந்த தமது



வீட்டுச் சாமான்களை வழித்துக் துடைத்து வாகனங்களில் ஏற்றிக்கொண்டு வந்தவர்கள் திரும்பிச் செல்வதற்கு காலதாமதமாவது குறித்து கவலைப்படவில்லை. பொடியங்கள் சொல்லிப்போட்டாங்கள் போகிடாதையுங்கோ என்று வாய்க்குவந்தமாதிரிக் கதைத்து எரிச்சலை ஏற்படுத்துவதும் இவர்கள் தான்.

இராணுவத்தினரின் சிவில் காரியாலயங்களுக்கு கொடிகாமத்துக்கும் கோப்பாய்க்கும் அலைந்து, கால் கடுக்க நாட்கணக்காக வரிசையில் காவல் நின்றும் தமது வீடுகளை பார்த்து விட்டு வருவதற்குக் கூட அனுமதி கிடைக்காது ஏமாந்து போனவர்களின் தவிப்பு எந்த அச்சுறுத்தலைக் கேட்டும் அடங்கு வதாயில்லை.

மிதிவெடிகள், நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டிருப்பதாக கூறி சில பகுதிகளுக்குச் செல்ல இராணுவத்



தினர் பொதுமக்களுக்கு அனுமதி வழங்காதபோதும் பொருட்களைத் திருடுவதற்காகச் செல்பவர்கள் போகாத இடங்களே இல்லை. ஒன்று அவர்கள் இராணுவத்தினரின் கண்களில் படாமல் டிமிக்கி கொடுத்து விட்டுச் சென்றுவருகிறார்கள் அல்லது கொடுக்க வேண்டியதை கொடுத்து வளைத்து வைத்திருக்கிறார்கள். இதனால் தமது வீடுகளில் எந்தப் பொருளும் மிஞ்சியிருக்காது என்ற ஏக்கம் அங்கு செல்வதற்கு நேர்மையான வழியில் இராணுவத்தினரின் அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களை வாட்டுகிறது.

குறிப்பிட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்காமல் அதனைச் சூழவுள்ள இதரகிராம



உத்தியோகத்தர் பிரிவுகளில் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் மீளக்குடியமர அனுமதி பெற்றவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளுக்குச் சென்று பொருட்களை அபகரித்துச் செல்வது புதியதொரு பிரச்சினையாக உருவாகியுள்ளது.

மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படாத பகுதிகளிலுள்ள வீடுகளிலிருந்து ஓடுகள், சீற்றுக்கள், மரங்கள், கதவுகள் என தேவையானவற்றை எடுத்துச் சென்று மீளக்குடியேறியவர்கள் தமது வீடுகளை செப்பனிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கியுள்ள இராணுவத்தினரோ, மீளக்குடியமர அனுமதி பெற்றுக்கொடுத்ததாக விளம்பரம் தேடிக் கொண்ட அரசியல் கட்சிகளோ, இந்தப் பிரதேசத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்களோ ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இடம்பெயர்ந்த சகலரும் ஏககாலத்தில் மீளக்குடியமர்வதற்கு அல்லது தமது வீடுகளுக்குச் சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு அனுமதித்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டிருக்காலம். அவ்வாறு செல்வதற்கு அனுமதி மறுத்துள்ள படையினர் அந்தப் பகுதி மக்களின் மிச்சசொச்சமாயுள்ள பொருட்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கையினையாவது எடுத்திருக்க வேண்டும். இனியாவது பரிகாரம் காணப்படுமா என்பதே திரும்பிச் செல்ல வேண்டும் என்ற எதிர்பார்க்கைகளுடன் அனுமதி கிடைக்காது ஏங்கி நிற்கும் மக்களின் ஆதங்கம்.

தொகுப்பு
கந்தையா

# குருவியார் பொறுக்கியவை

விசுக்கு விசுக்கென்று வேர்த்து விறுவிறுக்க வந்திறங்கினார் சிறு குருவியார். என்ன இன்றைக்கு நேரத்தோடேயே கூடு திரும்பி விட்டீர் என்று கேட்டேன். அதற்கு குருவியார் கொஞ்சம் பொறப்பா! தொண்டையெல்லாம் அடைக்குது. தண்ணி குடித்துவிட்டு சொல்கிறேன் என்றவர் சிறிது நேரத்தின் பின் கூட்டுக்குள்ளே இருந்து தலையை நீட்டி உமக்கு விஷயம் தெரியுமோ என்று சொல்லத் தொடங்கினார் பாருங்கள்.

அடைக்கலத்திற்கு மட்டும் "கிரீன் கார்ட்" ஏனையோருக்கு "ரெட்கார்ட்"

கடந்த தேர்தலின் போது வவுனியா-மன்னாரில் அடித்த மஹாஜன சுவீப்பில் தெரிவான மூன்று அதிர்ஷ்ட சாலிகளும் தம்மைத் தேர்ந்தெடுக்க வழிசமைத்தவர்களின் கட்டளைப்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டதுதான் தாமதம், மும்மூர்த்திகளிடையேயும் கடும் போட்டி. யார் பெறுவார் அந்த அரியாசனம் என்பதில்தான் தம் வாழ்வா சாவா தங்கியுள்ள நிலைமையில் யானைக் கட்சியின் யானைப்பாகன் அடைக்கலத்திற்கே அடைக்கலம் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இனிவரும் அடுத்த தேர்தலில் டிக்கெட் கிடைப்பதே நிச்சயமற்ற நிலையில் அடைக்கலத்தார் மீதும் அடைக்கலம் கொடுத்தவர் மீதும் கொதித்துப்போயிருக்கின்றார்கள் எஞ்சிய இருவர். மூடப்பட்ட பானையில் கொதி தாங்காமல் துடிக்கும் இவ்விருவரும் பானை மூடியையும் தூக்கி விளாசி விட்டு வெளியேறி வேறு இஸ்ட்டுகளுடன் சேருவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்னும் குண்டைத் தூக்கிப் போட்டார் குருவியார். "அண்ணன் என்னடா? தம்பி என்னடா? பதவி சுகம் கிடைக்கும் உலகத்திலே" என ஒரு பாட்டையும் இழுத்து விட்டார் குருவியார்.

## யானை கூட ஆழம் தெரியாமல் காலை விட்டது

50ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் கடைசி சில ஓவர்களில் கல்குலேட்டரை வைத்துக்கொண்டு மண்டையைப் பிய்த்துக் கொள்வது போல, சிலநாட்களுக்கு முன்னர் இலங்கை அரசியல் அவதானிகள் சிலர் எதையும் எதையும் கூட்டினால் 225ஐ இரண்டால் வகுத்து வரும் எண்ணிக்கையைப் பார்க்கிலும் கூடுதலாக வரும் என தலையைப் பிய்த்துக் கொண்டார்கள். இது எண்ணிக்கைகளினால் மட்டும் நடாத்தப்படும் கூட்டல் கழித்தல் அல்ல. ஏறத்தாழ 200இலட்ச மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் கணக்காகும். இந்த கணக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் நிலவரங்கள் பற்றி எமது குருவியார் கேட்ட அதிர்வுகள் சுவாரசியமானவை.

ஹக்கீமிற்கு கீ கொடுத்து கேம் விளையாட எண்ணிய தும்பிக்கையான் இப்போது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்[illegible] விட்டதில் பல தென்னிலங்கை சிவலிங்கத்தாருக்கு அம்மணி மேல் பெருமை. அதேவேளை தென்னிலங்கை சிவலிங்கத்தாரின் தண்ணீரையும் உரத்தையும் நம்பியிருக்கும் சிவப்பு மணிக்காரர் இத்தருணத்தில் அம்மணியை தடம் போட்டு வீழ்த்தினால் தென்னிலங்கை சிவலிங்கத்தார் தம்மை வேரோடு பிய்த்துக் கடாசி விடக்கூடும் என அஞ்சுகின்றனர். தும்பிக்கையான் கட்சிக்கு கிங்மேக்கர்களின் மணிஓசையிலை துளியும் நம்பிக்கை இல்லை.

தும்பிக்கையான் ஒன்பது தர்மலிங்கத்தாரின் சப்போர்ட்டோட ஹக்கீமும் கைகொடுக்க அம்மையாரைக் கவிட்டு விடலாம் என்று தான் கணக்கு. ஆனால் அவவோ வேற வேற கணக்கெல்லாம் போட்டுக் காட்டிவிட்டு. இப்ப ஒருவரும் நினைக்காத இடத்திலே கொண்டுபோய் விட்டுட்டா.

தற்போது நிலவும் அரசியல் கட்சிகளின் அதிர்வுகளிற்கு ஏற்ப யானையோடு சேர்ந்து ஆழம் தெரியாமல் காலை விட்டுட்டமோ என்றும் சிலர் யோசிக்கினம். தும்பிக்கையான் 97இலிருந்து ஆரம்பிச்சு 7ஐயும் 10ஐயும் இன்னமும் கூட்டிக்கொண்டிருக்கிறார். கிரகமாற்ற நிலவரப்படி ரணிலைப்பிடித்த சனி இன்னமும் ஆறு வருடத்திற்கு விடுவதாய் இல்லை.

## குளிர்காய இடம் மாறும் எமது ஆங்கிலேயத் தமிழர்கள்

லண்டனில் இலங்கைத் தமிழர்கள் பிரஜா உரிமை பெற்றவர்கள், பெறுவதற்கான தகுதியுடையவர்கள், அத் தகுதியை அடைய முயற்சிப்பவர்கள் என அப்படியும் இப்படியுமாக ஒன்றரைலகரத்தைத் தாண்டி விட்டார்கள். போகிற போக்கில் அடுத்த குடிசன மதிப்பீட்டில் ஆங்கிலேயத் தமிழர்கள் எண்ணிக்கை யாழ்குடா நாட்டு சனத்தொகையை மிஞ்சிவிடும். இவர்களில் சில முக்கியமான பிரமுகர்கள். சங்கங்கள், ஸ்தாபனங்கள், கழகங்கள் வைத்து தமிழையும், சமயத்தையும் தம்மையும் வளர்த்துக்கொண்டு வருகின்றார்கள். இதுவரை காலமும் தடை செய்யப்பட்ட தமிழ் இயக்கத்தின் சூட்டில் குளிர்காய்ந்து வந்தவர்கள்- இயக்கம் தடைசெய்யப்பட்டவுடன் நிலைகுலைந்து போனார்கள். தாம் கட்டிக்காத்த சங்கங்கள், ஸ்தாபனங்கள், கழகங்கள் மூலம் வசூல் செய்து இயக்கத்திற்கு அர்ப்பணித்தது குறித்து வெள்ளைக்காரன் விசாரிக்கத் தொடங்கினால் எங்கே தாம் இவ்வளவு காலமும் கஸ்டப்பட்டு வளர்த்து வந்த விசயங்கள் அம்பலமாகிவிடுமோ என்ற பயம் கல்விக்கொண்டது. இந்நாள் வரை லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தை வில்லூண்டிச் சுடலையைப் போல பார்த்து வந்தவர்கள், தடை வந்த பிறகு, கியூ வரிசையில் நின்று தூதுவருக்கு பஞ்ச ஆரத்தி எடுத்து மணி அடிக்கிறார்களாம். இதுவல்லோ கொள்கைப்பிடிப்பு. லண்டன் போனாலென்ன, அமெரிக்கா போனாலென்ன தங்கள் சுகங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளும் கலாச்சாரத்தைக் கடைப்பிடிக்கும் தமிழர்கள் ஊரில் இருப்பவன் மட்டும் போரில் மடியவேண்டும் என உறுதியாக இருக்கிறார்கள். வாழ்க சர்வதேசத் தமிழினம்.

தையற்குருவியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் நன்மைக்கு! மலையகத் தலைமைகள் ஒன்றிணைந்து செயற்படுக!

இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினையானது எந்தவொரு சமூகமும் நிம்மதியாக தங்கள் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத சூழ்நிலையைத்தான் உருவாக்கியுள்ளது. குறிப்பாக சிறுபான்மை இனங்கள் எவ்வாறான ஒடுக்கு முறைகளுக்கும், அடக்கு முறைகளுக்கும்



உள்ளாக்கப்பட்டார்கள், உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பது பற்றி புதிதாக எவரும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அந்த வகையில் அவரவர்கள் தாங்கள் சுதந்திரமாக, சுயாதீனமாக வாழ வேண்டும் என்று உணர்வதில் தவறு இல்லையாயினும் இதனை



அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் நாட்களில் அரசியல் மாற்றங்களில் நடக்கவிருக்கும் நன்மை தீமைகளில் கருத்து வேறுபாடின்றி ஒன்றிணைந்து முடிவு மேற்கொள்ள வேண்டிய தருணத்தை நாம் தவறவிடக்கூடாது. கடந்த தடவை பாராளுமன்றத்தில் புதிய அரசியல் திருத்த யாப்பு கொண்டு வரப்பட்ட போது மலையக மக்களின் பிரதிநிதிகளும் மற்றும் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் ஏற்படவிருந்த நன்மை தீமைகளைப் பற்றிய தெளிவான நிலைப்பாடு இன்றி ஐக்கிய தேசியக் கட்சியின் நலனோடு ஒட்டி மட்டும் விடயங்களைப் பார்த்து எதிர்பபு நடவடிக்கைகளில் ஈடுபட்டதனால் விளைவு எமக்கு நாமே தேடிக்கொண்ட தீவினைகள் மட்டுமே.


இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கும், இந்நாட்டின் பிரதான அரசியல் நெருக்கடியான இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்குப் பிரதான தடையாக இருப்பதுவும் இன்று நடைமுறையிலிருக்கும் அரசியல் யாப்பே என்பதில் எவருக்கும் வேறுபட்ட கருத்து இல்லை. இதை பெரும்பாலான ஐ.தே.க.வினராற்கூட மறுக்க முடியவில்லை.

ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலம் தொடக்கம் தற்போதைய ஆட்சியாளர்கள் வரை பல அரசியல் யாப்புக்கள் மாறி மாறி உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. மலையக மக்கள் சிறுபான்மை மக்களாக இருப்பதனால் அவர்கள் தொழிலாளர்கள் என்றும், தமிழர்கள் என்றும், இந்தியர்கள் என்றும் ஒடுக்கப்பட்டுள்ளார்கள். 1977ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரையான 17 வருட ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்குமுறைகளும், மக்கள் பட்ட துயரங்களும் கணக்கிலடங்கா. அதற்காக சுதந்திரக் கட்சிக்காரர்களின் ஆட்சிக் காலத்தில் மலையக மக்களுக்குப் பாதகமாக ஒன்றுமே நடக்கவில்லை என்று அர்த்தம் கொள்ளலாகாது.

இலங்கை சுதந்திரம் பெற்ற உடன் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தனது முதல் வேலையாக மலையகத் தமிழ் மக்களை நாடற்றவர்கள் ஆக்கினார்கள். பின்னர் ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலங்களில் மலையக மக்கள் மீது வன்முறைகளினாலும், ஒடுக்கு முறைகளினாலும் இடம் பெயர வைத்து மலையகத்தை விட்டு வெளியேறவும், நாடுகடந்து செல்லவும் வேண்டிய அளவுக்கு செயற்பட்டார்கள்.

1977ம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா 1978ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை உருவாக்கும் அரசியல் யாப்பு முறையை உருவாக்கினார். தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காக 1982ம் ஆண்டு சர்வஜன வாக்குரிமையை ஜனநாயக விரோதமான முறையில் பயன்படுத்திக் கொண்டது. அந்த நேரத்தில் மலையக மக்களின் வாக்குகளே ஐ.தே.க.வின் ஆட்சியைக் காப்பாற்றியது.

ஒருகாலத்தில் எந்த மக்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் இருக்கக்கூடாது எனக் கருதி இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை மற்றும் குடியுரிமைகளைப் பறித்தார்களோ. அந்த மக்களின் வாக்குரிமையைப் பயன்படுத்தியே தங்களின் இருப்பைத் தக்க வைத்துக் கொண்டார்கள் ஐ.தே.க.வினர். தமிழ் இயக்கங்களின் திம்புக் கோரிக்கையும், இந்தியாவின் நெருக்குதலும், மலையக மக்களின் வாக்குகள் தங்களுக்கே எப்போதும் பயன்படும் என்ற நப்பாசையுமே ஐ.தே.க ஓரளவுக்காவது மலையக மக்களின் குடியுரிமைகளை மீண்டும் ஒப்புக்கொள்ளும் நிலைமையை ஏற்படுத்தின.



ஐ.தே.க. காரர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த காலத்தில் மலையக மக்களுக்கு எந்தப் பாதகமும் நடக்காதது போலப் பேசிவரும் சில மலையகக் கட்சிகளினதும், தமிழ்க் கட்சிகளினதும் நிலைப்பாடு மிகவும் வேதனையைத் தருவதாக உள்ளது. நாட்டின் பாதகமான பொருளாதார நிலைமையை ஐ.தே.க.வினரும் அவர்களின் கூட்டாளிகளும் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முனைகின்றனர்.

1977ம் இனக்கலவரம் முதல் மலையகத்தில் மட்டுமல்ல நகர்ப்புறங்களில் தொழில் செய்த இளைஞர்களின், யுவதிகளினதும் நிலைமைகளையும், கைது செய்யப்பட்டவர்களினதும், காணாமல் போனவர்களினதும் பட்டியல் இன்று வரை தெரியாமலேயே உள்ளது. அப்படிப் பட்டவர்களின் போலித்தனமான அரசியலுக்கு நாங்கள் முண்டு கொடுப்பதை எதிர்வரும் காலத்தில் தவிர்த்துக் கொள்வது எமது சமூகத்துக்கு நாம் செய்யும் நன்மையாகும். இந்த ஐ.தே.கட்சியினர் மலையக பிரதேசத்துக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் தோட்ட உட்கட்ட அமைச்சுக்கு வழங்கவிருந்த நிதியை வழங்க விடாமல் எதிர்ப்புத் தெரிவித்ததை இங்கு நினைவிற் கொள்வது பொருத்தமாகும்.

கடந்த வருடம் ஆகஸ்ட்டில் பாராளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்புக்கான மசோதா சமர்ப்பிக்கப்பட்டபோது அதை கண்ணை மூடிக்கொண்டு இந்த ஐ.தே.க.வும் அதன் கூட்டாளிகளும் எதிர்த்தனர். இன்று பாராளுமன்றத்தில் ஐ.தே.கட்சியின் பிரதிநிதிகளாகவும், பொதுஜன முன்னணியின் பிரதிநிதிகளாகவும் மலையக மக்கள்



சார்பாக தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்தந்த கட்சியின் நலன்களுக்காகச் செயற்படுவது புத்திசாலித்தனமானதல்ல.

மாறாக, நடக்கவிருக்கும் அரசியல் மாற்றங்கள் எமது மக்களுக்கு நன்மை அளிக்குமா தீமையைத் தருமா என்பதை ஒப்பிட்டு நோக்கித் தீர்மானிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அன்றிலிருந்து இன்று வரை ஆதிக்கம் செலுத்திய பேரினவாதிகள் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நேரிடையாகவும், மறைமுகமாகவும் அனைத்து நடவடிக்கைகளையும் செய்துகொண்டுதான் இருக்கின்றார்கள். குறிப்பாக அனைவருக்கும் வழங்கிய சம்பள உயர்வைக்கூட தொழிலாளர்கள் பெற முடியாதளவுக்கு தொழிலாளர்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்தை கொச்சைப் படுத்தியவர்கள் இன்று நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது பற்றிப் பேசுகிறார்கள். மலையக தமிழ் மக்கள் சுதந்திரமாக, ஜனநாயக ரீதியாக நியாயமான போராட்டங்களை கூட செய்ய முடியாத நிலைமைக்கு மறைமுகமாக ஒத்தூதியவர்களுக்காக நாம் முண்டு கொடுப்பது எந்தளவுக்கு நியாயம் என்பதை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டும். தலவாக்கொல்லையில் நடைபெற்ற நியாயமான சத்தியாக்கிரகத்திற்கு எதிராக கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைந்து செயற்பட்ட பேரினவாதிகளின் செயல்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

எமது மக்களுக்கு எதிராக கபடத்தனமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த இனவாதிகள் தங்களுக்குள் முட்டிக் கொள்கிறார்கள். 1977ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் இருந்து நாட்டை விடுவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை ஏற்படுத்துவதில் மலையக மக்கள் மிகப் பெரும்பான்மையாக ஒருமித்து நின்று செயற்பட்டனர். ஆனால், ஆட்சியைப் பிடித்ததும் அந்தக் கட்சி மலையக மக்களை நாயை விரட்டுவது போல் விரட்டியதை, தொடர்ந்தும் ஒவ்வோர் ஆண்டும் விரட்டியதை மனதிற் கொள்ள வேண்டும். எனவே நாம் எமது மக்களிற்கு எதிர்காலத்தில் எது நன்மை? எது பாதகமானதானது என்பதை கணக்கிட்டு மட்டுமே செயற்பட வேண்டும். கட்சி பேதம் பார்க்காமல் சமூகத்தின் நலனை கருத்தில் கொண்டு ஒன்றிணைந்து ஜனநாயகபூர்வமாக முடிவெடுத்துச் செயற்படுதலே இன்றைய அவசியமாகும்.

**குறிஞ்சி குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்துக்கு மாற்று வழியாக மக்கள் ஆணை வாக்கெடுப்பு

ஜய்யன்னா தேயன்னா கானாவும், தானா வீனா கூனாவும், தானா கானாவும், தானா ஈயன்னா வீனா இனா ஆனா கானா நாதனும் நம்பிக்கையில்லாப் பிரேரணையையே தம் எதிர்கால அரசியல் வாழ்விற்கு நம்பியுள்ளார்கள் போலத் தெரிகின்றது. தங்களின் கையில் நம்பிக்கையில்லா நிலையிலுள்ள இவர்கள் ஹக்கீமும் விமல் வீரவன்சாவும் தமக்குக் கைகொடுப்பார்கள் என்றே ஆட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

ஹக்கீமை சந்திரிகா அம்மையார் தூக்கி எறிந்ததும் அந்த நம்பிக்கை மலைபோல உயர்ந்தது. ஜாவத்த மையவாடியில் ஹக்கீமின் தொழுகையின் போது அங்கு பே.ஃரியல் அஷ்ரப் வந்தமையால் முஸ்லீம் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டது என்றே பலரும் நம்பினார்கள். இந்த வேளையில் ஐ.தே.க அரசாங்கத்தில் சேர்வதற்கும் தாங்கள் தயாரென அமைச்சர் டக்ளஸின் அறிவிப்பு. அமைச்சர் ஆறுமுகத்தாரும் அரசாங்கத்தின் காலை வாரி விடக்கூடுமென எதிர்க்கட்சிகளுக்குள் எதிர்ப்பார்ப்பு என நம்பிக்கைகள் மின்னின.

அம்மையார் ஹக்கீமைத் தூக்கி வெளியே போட்டதை அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இரு வெவ்வேறு விதமாக நோக்கினர் "இந்த மனுசி ஏன் இந்த நேரம் இப்படிச் செய்தா?" என தங்களுக்குள் கேள்வி எழுப்பிக்கொண்டவர்கள் ஒருபக்கமும், ஹக்கீமைத் தூக்கி வெளியே போடத்தான் வேண்




டும் எவ்வளவு காலம்தான் பொறுக்க முடியும் எனப் பொருமியவர்கள் ஒரு பக்கமும் என ஏற்பட்டன.

ஆட்சியில் சேர்ந்த நாளிலிருந்து ஹக்கீம் அவர்கள் அரசாங்கத்திற்கு காலக்கெடு விதிப்பதில் கடும்பிடியாகவே இருந்து வந்துள்ளார். ஹக்கீமே தமது துருப்புச் சீட்டென ஐ.தே.க இப்போது மட்டுமல்ல, ஆரம்பத்திலிருந்தே நம்பி வந்தது. அது இப்போது நனவாகி விட்டதாகக் கனவு காண்கின்றது.

ஹக்கீமின் கடும் போக்கான பேரம் பேசும் போக்கு சிங்களவர் மத்தியில் முஸ்லீம்களுக்கு எதிரான ஓர் இனவாதத்தை கிளறிவிட்டது என்றும் சிலர் கூறுகின்றார்கள். அதற்கு ஓர் உதாரணமாக, சிங்களவர் மத்தியிலுள்ள படு முற்போக்கான ஒருவரெனக் கூறப்படும் எஸ்.டி. பண்டாரநாயக்கா அண்மையில் ஒரு தமிழ்க் கூட்டத்தில் 70 வீதம் பெரும்பான்மையினரான சிங்களவரின் உரிமைகளை 7வீதமாக மட்டுமே உள்ள முஸ்லீம்கள் பறிக்க முனைகின்றார்கள் எனக் கூறினாராம்.

சுதந்திரத்திற்கு முன்னர் இந்திய வம்சாவழியினருக்கு எதிராக வளர்க்கப்பட்ட சிங்கள இனவாதம் சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழர்களுக்கு எதிராக வளர்க்கப்பட்டது. இப்பொழுது முஸ்லீம்களுக்கு எதிராக எவ்வளவு ஆழமாகப் புகைந்து கொண்டிருக்கின்றது என்பதை மேற்கூறப்பட்டவாறான கருத்துக்கள் காட்டுகின்றன. மாவெனெல்லை சம்பவங்கள் அந்த இனவாத வளர்ச்சியின் மணி ஓசை என்றே தெரிகின்றது.

ஹக்கீமைத் தூக்கி எறிந்ததால் அரசாங்கத்திற்கு சிங்களவர் மத்தியில் ஆதரவு கூடியுள்ளது. என்றும் கருதப்படுகின்றது. மிகக் குறுகிய காலத்தில் தேர்தல் வருமானால் ஹக்கீமைத் தூக்கி எறிந்ததை அங்கீகரிக்கும் வகையில் சிங்கள மக்கள் அமோகமான அளவில் ஆதரவளிப்பார்கள் என ஓர் ஆசையும் அரசாங்க வட்டாரத்தில் இருப்பதாகத் தெரிகின்றது.



ஹக்கீமை நீக்கியதைப் பாராட்டும் வகையாக சிஹல உறுமய மட்டுமல்ல சிவப்புப் போர்வை போர்த்த மக்கள் விடுதலை முன்னணியும் அங்கீகாரம் வழங்கியே வருகின்றது. சிறுபான்மையினரின் உரிமைக் கோரிக்கைகளை பெரும்பான்மையினரை மிரட்டிக் கப்பம் கேட்பதாக அக்கட்சி விளக்கமும் அளிக்கின்றது.

ஜே.வி.பி. யினருடன் ஹக்கீம் தொடர்பாக ஓர் உடன்பாட்டிற்கு வந்த தன் பின்புதான் அவரை அம்மையார் தூக்கியெறிந்தார் என மேல் மட்டத்தில் வதந்திகள் உலாவுகின்றன. ஜனாபா ஃபேரியல் அஷ்ரபின் இரகசியக் கோரிக்கைகளுக்கு இணங்கித்தான் ஹக்கீம் வெளியேற்றப்பட்டார் என்று நம்புவதையும் மறுப்பதற்கில்லை.

ஐ.தே.க வை நம்பி ஹக்கீம் காலை விட்டாரா? அல்லது ஜனாதிபதி தன்னைத் தூக்கி எறியும் அளவுக்கு துணியமாட்டார் என எண்ணினாரா? என்பது தெரியவில்லை ஆனால் ஹக்கீம் கட்சியினரை தாங்கள் ஆட்சியில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என அறிவித்து விட்டார்கள். எங்கே ஹக்கீமுக்கு எதிரான இனவாத அலை தங்களுக்கு எதிராக வந்துவிடாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஐ.தே.க வினர் இறங்கியுள்ளார்கள்.

இதேவேளை பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பற்றிப் பல்வேறு விதமான எண்கணித கணக்குகள் அமைச்சர்களாலும் எதிர்க்கட்சித் தலைவர்களாலும் மாறி மாறித் தெரிவிக்கப்பட்டன. ஒரு கணக்கை மூன்று நான்கு விதமாகக் கூறலாம். எப்படியாயினும் ஒரு கணக்குக்கு ஒரு விடை மட்டும்தான் என்பதை யாவரும் அறிவர்.

ஆனால் எங்கள் பாராளுமன்ற அரசியல் தலைவர்களோ ஒரு கணக்குக்கு ஒன்றுக்கொன்று முரணான பல விடைகளைத் தந்தார்கள். இவர்கள்

இதற்கிடையில் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டப்படி ஜனாதிபதியே சகலதும். எனினும் பாராளுமன்றத்தை முதல் ஒரு வருடத்தினுள் கலைக்க முடியாது. அதனால் அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தோற்றுப் போனால் ஐ.தே.கட்சியே ஆட்சியமைக்கும் என அவர்கள் கூறினார்கள். இல்லையில்லை ஜனாதிபதியே அரசாங்கம், அவரே அமைச்சர்களைத் தெரிவு செய்வார், யாரைத் தெரிவு செய்வது என்பதை அவர் மட்டுமே முடிவு செய்வார், இந்த அரசாங்கமே தொடர்ந்து இருக்குமென அமைச்சர்கள் பலரும் கூறினார்கள்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெற்றவரே பிரதமராவார். இதுவே அரசியல் சட்டம். இதைமட்டுமே ஐ.தே.க நம்பியிருந்தது. இன்னமும் நம்பியிருக்கின்றது. ஆனால் அமைச்சர்கள் கூறுவதும் அரசியல் யாப்பின்படி சரியே பாராளுமன்றத்தில் இந்த அரசாங்கத்தைத் தோற்கடிக்கலாம். அதற்கு எதிர்க்கட்சிகளெல்லாம் சேர்ந்து ஹக்கீம் உட்பட வாக்களிக்கலாம்.



ஆனால் ரணில் விக்கிரமசிங்கதான் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெற்றவர் என்பதனை ஜனாதிபதி நம்பவேண்டும் அல்லது அதற்கென தனியான வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்காவுக்கு தலை எழுத்து அப்படியில்லை என்றே தெரிகின்றது.

த.ஈ.வி.மு வின் அ.க.நா. செல்வம் கூறியபடி ஐ.தே.கவுடன் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே த.ஈ.வி.முவின் ஆதரவு. இதனை அரசாங்கம் அது என்ன ஒப்பந்தம் என்று உரத்துக்கேட்கின்றது. கப்பம் என்று வீரவன்ச சொல்ல, துரோகம் என்று பீடங்கள் சொல்ல, அதிர்ந்து போன




கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிப்பது வேறு, ஐ.தே.கட்சியின் பத்திரிகையாளர் மாநாடுகளில் போய் குந்தியிருந்து ஒட்டி உறவாடுவது வேறு எனத் த.வி.கூட்டணிக்குள் தடுமாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவென்று அவர்களுக்குள் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஹக்கீமாலோ, ஜே.வி.பியினராலோ அல்லது இரண்டு கட்சிகளாலுமோ அரசாங்கம் காப்பாற்றப்பட்டுவிடுமென கூட்டணிக்குள் வலுவான வாக்குவாதம் ஏற்பட்டது. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என அரசோடு இருந்து வந்த கள்ள உறவுக்கும் கொள்ளி வைத்து விட்டதாக திருகோணமலையார் கிளிநொச்சியாருடன் கோபிப்பதாக திருகோணமலை வட்டாரங்கள் தெரிகின்றன.

இங்கு ஓர் விடயம், ஐ.தே.கட்சியும் அனைத்து தமிழ்க்கட்சிகளும், ஹக்கீம் கட்சியும், மணியோசைக் காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக வாக்கு போட்டாலும், ஜனாதிபதி அவர்கள் தன்னுடைய அரசாங்கம் இருக்க வேண்டாமெனக் கருதினாலும் ஐ.தே.க ஆட்சியில் அமரும் சாத்தியங்கள் மிகக்குறைவே. ஏனெனில் எதிர்வரும் ஒக்டோபர் 10இற்கு முதல் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாதெனினும் பாராளுமன்றத்தை எந்த வேளையிலும் இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு.

அந்த ஒத்தி வைக்கும் அதிகாரத்தை ஜூலை மாதம் 10ம் திகதியை ஜனாதிபதி பிரயோகித்து விட்டார். செப்டெம்பர் 7ம் திகதியை பாராளுமன்றம் மீண்டும் கூடுமென அறிவித்துவிட்டார். எவராலும் எதிர்பார்க்கப்படாத, எதிர்கட்சிகளையெல்லாம் அதிரவைத்துவிட்ட, நம்பியிருந்த ஐ.தே.கவையும், த.வி.கூ, த.கா, ரெலோ ஆகியவற்றையும் நிலைகுலைய வைத்து



சட்டங்களைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அறிவுடையவர்களா? இல்லையா? என்ற கேள்விக்குப் பதில் ஒரு புறம் இருக்க தங்களைப்பற்றிக் கணக்குப் போடுவதில் மேற்கத்தைய அறிஞன் அரிஸ்டோட்டிலையும் கீழைத்தேய அறிஞன் ஆரியப்பட்டாவையும் அசத்தி விட்டார்கள்.

ஐ.தே.க கட்சியோ அப்படி எதுவுமேல்லை எனக் கூறிவிட்டது. பின்னர் செல்வத்தார் எதையும் சொல்லாமல் விட்டுவிட்டார். ஒப்பந்தத்தை ஐ.தே.க ஏற்காமல் அரசாங்கம் ஏற்றுக் கொண்டாலும் தாங்கள் ஆதரவளிக்கத் தயார் என ரேலோ ராஜகுகனேஸ்வரனும், வினோதலிங்கமும் வேறு

விட்ட ஓர் அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டிருக்கிறார். அதுதான் ஆகஸ்ட் 21ம் திகதி. புதிய அரசியல் யாப்புக்கான மக்கள் ஆணையைக் கோரும் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும் என்ற அறிவித்தல்.

இந்த விடயத்தில் பொதுஜன முன்னணி சார்பில் டக்ளஸ், இ.தொ.கா ஆறுமுகம் தொண்டமான், திருமதி அஷ்ரப் ஒன்றாக நிற்பர். எதிர் கட்சிகளெல்லாம் ஹக்கீம் உட்பட இந்த அறிவித்தலைக் கண்டு திடீர் ஆத்திரமும் குழப்பமும் கொண்டு ஜனநாயகத்தை அரசாங்கம் தொலைத்துவிட்டதாக, புதைத்துவிட்டதாக கூறினாலும் அவை சர்வசன வாக்கெடுப்பு விடயத்தில் ஓரணியில் நிற்பார்கள் என்பது சந்தேகமே.

த.வி.கூ, த.கா, த.ஈ.வி.இ ஆகிய தமிழ் கட்சிகள் என்ன செய்ய வேண்டும் என்பதை வன்னி ராஜாவே வழிகாட்டுவார். சொன்னதைச் செய்வார்கள் என்றே பலரும் எதிர்ப்பார்க்கிறார்கள். அம்மா கூப்பிட்டு நியாயங்கள் சொன்னால் சங்கரியார் எவ்வழி போவார் என்று சொல்ல முடியாது. இதற்கிடையில் செல்வத்தோடு பாராளுமன்றம் சென்ற மற்ற இருவரையும் திருப்திப்படுத்தும் வேலை ஓர் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக கேள்வி.

ஹக்கீம் அவர்கள் புதிய அரசியலமைப்பை எதிர்ப்பார் எனக் கூறமுடியாது. ஒரு வகையில் இந்தப் புதிய யாப்புப் பிரேரணையை கடந்த ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தவரே மறைந்த அஷ்ரப் அவர்கள்தான். ஹக்கீமோடு அரசாங்கம் புதிய யாப்புத் தொடர்பாக உடன்படுவது மிகச் சுலபமாகும். அடுத்த கட்ட புதிய உறவுகளுக்கும் இது இட்டுச் செல்லக் கூடும். முஸ்லீம் தலைவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை தமிழ் தலைவர்களைப்போல கோட்டை விடுபவர்களல்ல. அது அவர்களின் சமூக இயல்பாகவுள்ளது.



**❊ இப்போது நடைமுறையிலிருக்கும் தவறான தேர்தல் முறையை மாற்றவும்,**

**❊ இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விதமாக விரிவான அதிகாரங்கள் கொண்ட மாநில அரசுகளை உருவாக்கவும்,**

**❊ அனைத்து நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றவும்,**

**❊ மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமைகள் தொடர்பாக இன்னமும் நிலவிவருகின்ற குழப்பங்களுக்கு ஒரேயடியாக தீர்வு காணவும்,**

**❊ நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக முன்னேற்ற கரமான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும்.**

போன்ற நாட்டுக்கும் பொது மக்களுக்கும் உடனடித் தேவையாக உள்ளவற்றை ஏற்பாடு செய்ய புதிய அரசியல் யாப்பு தேவைப்படுகின்றது.


அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீமானத்தை எதிர் நோக்க முடியாமற் தான் இந்த நடவடிக்கையை எடுத்தது எனக் கூறினாலும், இப்போது இதனைத் தத்தம் நலனிலிருந்து நோக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்னும் சில நாட்களில் அனைத்துக் கட்சிகள் மத்தியிலும் விவாதம் நம்பிக்கையில்லாத் தீமானம் பற்றியதல்ல, புதிய அரசியல் யாப்பு வேண்டுமா? வேண்டாமா? அதனை ஆதரிப்பதா? இல்லையா? என்ற விவாதம் முன்னரங்கில் நிற்கும்.

**- நாராயணன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவர் துஷ்பிரயோகம்



யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர்கள் மத்தியில் தவறுதலாக மண்ணெண்ணை பருகுபவர்களின் தொகை அதிகரித்து வருவதாக யாழ் அரசின் போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் வைத்திய நிபுணரான கலா சோமசுந்தரம் எச்சரித்துள்ளார்.

இது விடயத்தில் சிறுவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் மிகவும் கவனக்குறைவாகவே இருந்து வருகின்றனர். இவ்வாறாக மண்ணெண்ணை குடித்து சிகிச்சைக்கு வருபவர்களின் தொகை வாரத்தில் இரண்டாகவுள்ளது. தவறுதலாக மண்ணெண்ணை குடித்ததால் சிறுவர்கள் மரணித்த சம்பவமும் இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

எனவே, வீடுகளில் மண்ணெண்ணை போத்தல்களை எக்காரணம் கொண்டும் குழந்தைகள் எடுக்கக்கூடிய வகையில் வைக்க வேண்டாம் எனவும், குறிப்பாக கொழும்பில் இருந்து வரும் பிளாஸ்ரிக் சோடாப் போத்தல்களில் மண்ணெண்ணையை வைப்பதாலேயே குழந்தைகள் அதனைச் சோடா எனக் கருதிப் பருக நேரிடுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.



அத்துடன், தவறுதலாக குழந்தை மண்ணெண்ணையைக் குடித்துவிட்டால் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டாம் எனவும் எச்சரித்துள்ளார்.

மேலும், இலங்கையில் யாழ் மாவட்டத்தில்தான் சிறுவர் மத்தியில் தவறுதலாக மண்ணெண்ணை பருகும் வழக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் எனும் தொனி உலகமெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றபோது அதே வேகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய துன்பங்களுக்கெல்லாம் காரணம் நாம் தெய்வீகத்தில் இருந்து வேறாகிப் போய்விட்டமையேயாகும். மதங்கள் கூறுகின்ற நல்லவற்றை நாம் ஒதுக்கி வைத்து விட்டு வெறிபிடித்து அலைகின்றோம். மதங்கள் கூறுகின்ற பிரகாரம் நற்போதனையில் நாம் வாழ்வோமானால் இன்றைய பட்டறைகள் ஏற்படமாட்டா.

நாம் மேடைப் பேச்சிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். செயல்ரீதியாக நாம் எவ்வளவு செய்திருக்கின்றோம். நாம் நடைமுறையில் பார்க்க வேண்டும். எமது செயல்பாடுகள் சமுதாயத்தின் அடிமட்டத்திற்குச் சென்றடைய வேண்டும். அப்போதுதான் வெற்றி கிடைக்கும். பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் எமது சமுதாயத்தில் பயங்கரமான காட்சியாகவுள்ளது. மனிதனின் அடிப்படைக்குணம் மாற வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

எங்கே சிறுவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றனவோ அங்கேதான் சிறுவர் துஷ்பிரயோகம் இடம் பெறுகிறது. நாம் சிறுவர்களின் உடல் வளர்ச்சியைத்தான் பார்க்கின்றோமேயொழிய அவர்களின் மேம்பாடு பற்றி அக்கறைப் படுவதில்லை.

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் யாழ்ப்பாணத்தில் அபாயகரமான நிலையில் ஏற்பட்டு வருகின்றது. பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இது விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை. எல்லாமே சரியாக நடக்கின்றன என நாம் மௌனித்து இருக்கின்றோம். சிறுவர்களின் ஆற்றல், திறமை மற்றும் ஆளுமையை வளர்ப்பதில் நாம் காட்டுகின்ற ஆர்வம் போதாமல் உள்ளது

மகப்பேற்று நிபுணர் ஜீ. பவானி அவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு நாம் கூடிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பாலியல் துஷ்பிரயோகம் நடந்த பின்னர் அது பற்றிக் கவலைப்படுவதிலும் பார்க்க, சரியான திட்டம் வகுத்து இதனை எமது சமுதாயத்தில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

**யாழ், நிருபர்**

## சும்மா பே(ற)ச்சு வாக்கிலே காற்று வாக்கிலே தெறித்து விழுந்தவை

இலங்கை வாழ் தமிழ்மக்கள் பொது இடங்களில் (பஸ் ஸ்டான்ட், புகையிரத நிலையம், தியேட்டர், கோவில், சந்தை, ஆஸ்பத்திரி, முகாம்கள்) சந்தித்துப் பேசும் போது காற்று வாக்கிலே காதில் விழுந்த சம்பாஷணைகள் சில இங்கு இடம் பெறுகின்றன.

### யாழ்ப்பாணம்

#### பொதுச் சந்தையில் கடைக்காரரும் கடைக்கு வந்தவரும்

"என்னப்பா மாம்பழ விளைச்சல் இந்த முறை பெரிய விளாசலாமே. கொள்ளை மலிவு எண்டு பேப்பர்காரர் போட்டிருக்கினம். நீ என்னடா வெண்டால் இப்பிடி விலை சொல்லுறியே?"

"பேப்பர்காரர் அப்பிடித்தான் போடுவினம் அவைக்கென்ன?. கொள்ளை மலிவெண்டால் வாங்கின விலைக்கே தரச் சொல்லுறியள்?"

"பேப்பர்காரிண்ட குரல் நாட்டு நடப்பின்ர குரல் எண்டுதானே சொல்லுகினம்"

"ஐயோ கடவுளே எங்களுக்கெல்லாம் உந்த பேப்பர் வியாபாரம் தெரியாதய்யா"

"ஓம் ஓம் பேப்பர் வியாபாரம் தெரிஞ்சா நீ ஏன் மாம்பழம் விக்க வாறாய் பேப்பர் அடிச்சு விக்கவல்லோ போயிருப்பாய்"

### வவுனியா

#### ரயில்வே ஸ்டேசனில்

"என்னப்பா ஒரு நாளும் இல்லாத திருநாளா இண்டைக்குக் கையில சிகரெட்டோட நிக்கிற?"

"மச்சான் ஜேர்மனியில இருந்து வரேக்க கொண்டு வந்தது ஃபோரின் சிகரெட் தானே எப்படி இருக்கு எண்டு பாக்கிறதிலையும் ஒரு ஸ்டைல் தானே?"

"ஆளைக் கொல்லுற விஷயத்துல [illegible] அரளிக் கொட்டையும் ஒண்டுதான். எந்தச் சிகரெட்டைக் குடிச்சாலும் முதல்ல புகைவரும் - பிறகு புகைச்சல் தானப்பா வரும்.

### மட்டக்களப்பு

#### பிரைவேட் ஆஸ்பத்திரியில் டொக்டரும் நோயாளியும்

"ரெண்டு நாளா உடம்பெல்லாம் ஒரே சொறியும் அரிப்பும்"

"ஒரு ஊசி போடுறன் எல்லம் சரியாப் போயிடும்"

"இப்ப போடுற ஊசியில சரி வரேல்லயென்டா."

"அதெல்லாம் சரிவருமப்பா போட விடு.."

"அப்பிடிச் சரிவரேல்லயென்டா

டொக்டர் கோபத்தோட "சரி வரேலை யென்டா இந்த ஊசியில நிறைய கல்சிய சத்தும் கொஞ்சம் சயனைட்டும் இருக்கு அதனால நல்லா நிகம் வளரும் சுடலையடியில போயிருந்து நல்லா சொறிஞ்சு விடு"

### கொழும்பு

#### வெள்ளைவத்தை கொம்யூனிகேசன் கடை அருகில் இரண்டு யாழ் இம்போர்ட்டட் வயோதிபர்கள்

"என்னப்பா சமாதானம் வருமோ அல்லது ஆட்சி மாறுமோ? எது முதல்ல வரும்?"

கோழி முதல்ல வருமோ முட்டை முதல்ல வருமோ எண்டு கேக்கிறமாதிரியெல்லோ இருக்கு?"

"உது பழங்கதை இரண்டும் வராது. எலெக்ஷன்தான் வரும்"

"எலெக்ஷென் வந்தால் சமாதானம் வருமோ?"

"மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஏனப்பா முடிச்சுப் போடுறாய்?

எலெக்ஸன் எத்தினை தரம் வந்திட்டுப் போயுட்டுது ஏதாவது வந்ததே.

**சக்கடத்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா நாயகனும் சுப்பர் ஸ்டாரும் மீண்டும் சேர்ந்திடும் போது

தெனாலி வெள்ளி விழா சென்ற மாதம் நடைபெற்றது. இவ்விழாவில் கமலும் ரஜனியும் மேடையில் இணைந்து வீற்றிருந்தது லட்சோப லட்சம் சினிமா ரசிகர்களுக்கு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. கே.எஸ். ரவிக்குமார் தயாரிப்பான தெனாலி வெற்றி பெறும் என்பதை பலரும் அறிந்திருந்தனர்.



ஆனால் இப்படத்தின் வெற்றி விழா, படத்தைக் காட்டிலும் ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டு விட்டது. ஒரு திரைப்பட விழாவில் இவ்விருவரும் இணைவதே இத்தகையதோர் வெற்றிக்களிப்பைத்தரும் என்றால், இவ்விருவரும் உண்மையிலேயே ஒரு திரைப்படத்தில் இணைவார்களேயானால் அத்தகையதோர் படம் இந்தியாவிலேயே பல வசூல் சாதனைகளை ஏற்படுத்தும். ஆனால் எதிர்காலத்தில் அப்படியோர் சந்தர்ப்பம் அமையுமா? இங்குதான் பல சிக்கல்கள் தோன்ற வாய்ப்புண்டு.

தமிழக சினிமாவில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த இரு சக்கரவர்த்திகள் எம்.ஜி.ஆரும், சிவாஜியும் இவர்கள் இருவரும் சேர்ந்து தமிழ் திரையுலகில் கால் நூற்றாண்டிற்கு மேலாக திரையாட்சி செய்த போதிலும் ஒரே ஒரு படத்தில் மட்டுமே இணைந்து நடித்தார்கள்.

அதுகூட 1950இன் ஆரம்பங்களில் தான் இருவருமே புகழின் உச்சிக்குச் செல்லாத ஆரம்பகட்டத்தில் டி.ஆர். ராமண்ணாவின் இயக்கத்தில் "கூண்டுக் கிளி" என்ற படத்தில் இணைந்து நடித்தார்கள். இப்படத்தில்



எம்.ஜி.ஆர் கிட்டத்தட்ட கதாநாயகன் வேடத்திலும் சிவாஜி ஏறத்தாழ வில்லன் வேடத்திலும் நடித்தார்கள். ஆயினும் படம் தோல்வியே அடைந்தது. இதற்குப் பிறகு இருவரும் இணையவேயில்லை. திரையுலகில் மட்டுமல்ல அரசியல் உலகத்தில் கூட இருவரும் எதிர் எதிர் துருவங்களாகவே இருந்தனர். இருவரும் சாதாரண விழாக்களில் இணைவது கூட அபூர்வமாகவே இருந்தனர்.

சிவாஜியின் சொந்தத் தயாரிப்புக்களான "புதிய பறவை" வியட்நாம் வீடு அமோக வெற்றியைப் பெற்றன. அதேபோல எம்.ஜி.ஆரின் நாடோடி மன்னன், அடிமைப் பெண், உலகம் சுற்றும் வாலிபன், வசூலில் சாதனைகளை ஏற்படுத்தின. இருவருக்கும் என்றே தனித்தனி இமேஜ் கதாநாயகிகள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், ரசிகர்கள் கூட்டம் என இருந்தன.

எம்.ஜி.ஆருக்கென அரசியல் பாணியில் சொல்லப்படும் கதைகள் படமாக்கப்பட்டன. சிவாஜியின் நடிப்பாற்றலால் அவரின் படங்கள் குடும்பப்பாங்காக அமைந்தன. இருவரும் வளர்ந்துவிட்ட நிலையில் இக்காரணிகள் அவர்கள் இணைவதற்கு தடையாக அமைந்துவிட்டன. அத்துடன் இருவரும் திரைப்படத்துறை நுணுக்கங்களை மிக அதிகளவில் தெரிந்து வைத்திருந்தனர்.

அதனால் ஒரு சிறந்த திரைப்பட இயக்குநர் கூட இருவரையும் திருப்தி செய்யும் வகையில் ஒரு படத்தை இயக்க முடியாத நிலை இருந்தது. குறிப்பாக இருவரில் ஒருவர் சோடை போகும் காட்சி ஒன்று அமைந்தாலே தியேட்டர் தீக்கிரையாகக் கூடிய நிலை அன்று காணப்பட்டது.

இதே மாதிரியான நிலைமை இன்று கமல், ரஜனி மத்தியில் இல்லாவிட்டாலும் அவரவருக்கு என இருக்கும் இமேஜ் பெரிய வித்தியாசத்தையே ஏற்படுத்துகின்றது. எம்.ஜி. ஆர்., சிவாஜி போன்றே கமலும் ரஜனியும் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலம் திரை வானில் மின்னிக்கொண்டிருக்கின்றார்கள்.



ஆனால் ஆரம்பகால கட்டங்களில் இவர்கள் இருவரும் இணைந்து அபூர்வராகங்கள் (இது ரஜனியின் (முதற் படம்) பதினாறு வயதினிலே, நினைத்தாலே இனிக்கும், ஆடு புலி ஆட்டம் போன்ற படங்களில் நடித்துள்ளார்கள்.

ஆனாலும் இதிலோர் உண்மை என்னவெனில் இப்படங்களிலெல்லாம் கமல் சீனியர் அந்தஸ்தில் கதாநாயகனாகவும் ரஜனி சின்ன ரோலில் வில்லத்தனம் செய்து தனக்கென ஒரு இமேஜையும் ஏற்படுத்திக் கொண்டார். இவர்கள் இருவரில் வயதில் ரஜனி கமலை விட 5வயது மூத்தவர்.

ஆனால் நடிப்புலகில் கமல் ரஜனியைவிட படு சீனியர் பால்மணம் மாறாத பருவத்திலேயே களத்தூர் கண்ணம்மாவில் கமல் பாடும் "அம்மாவும் நீயே அப்பாவும் நீயே" நெஞ்சை நெருக்கும் காட்சியாக அமைந்தது.

இவர்கள் இருவரும் ஆரம்ப காலந்தொட்டே (1975 முதல்) நண்பர்களாக இருந்த போதிலும் இவர்களின் நெருக்கம் 1990களின் பின்னர் பெரிதளவில் வளர்ச்சியடையத்துவங்கியது. இவர்களின் குரு இயக்குநர் கே. பாலசந்தர். அவரே இவ்விருவரின் வளர்ச்சியிலும் சுக துக்கங்களிலும் பங்கு கொண்டவர். திரைப்படத்துறையின் சகல அம்சங்களையும் கமலும் ரஜனியும் கரைத்துக் குடித்தவர்கள்.

இருவருமே தங்கள் பலத்தையும் பலவீனத்தையும் உணர்ந்தவர்கள். திரைப்படத்துறையினைப் பாதிக்கும் எந்தவிடயத்திலும் இருவரும் முன்னின்று ஒன்றாக உழைப்பவர்கள்.

ரஜனியைப் போலல்லாது கமல் திரையுலகில் பல அபாயகரமான துணிச்சல்களை எடுத்து தோல்வியைக் கண்டு துவளாது, அயராது உழைத்து பல வெற்றிப் பரிமாணங்களைக் கண்டவர். தனக்குச் சரியெனப் பட்டதை சகல கலை நுணுக்கங்களோடும் தன் சொந்தப் பணத்தில் திரைப்படமாக திறமையுடன் வெளிக்கொண்டு வருபவர். தோல்விகளைக் கண்டு அவர் அஞ்சுவதில்லை. சமீப காலங்களில் கமல் நடித்த, அவ்வை சண்முகி, இந்தியன், நாயகன், ஹேராம், தெனாலி அவரின் கலை உலக வளர்ச்சியைக் காட்டுகின்றது.

ரஜனியின் ரசிகர்கள் அவரை ஓர் சுப்பர் ஸ்டாராகவே கருதுகின்றார்கள். அவருக்கென்று அமைந்த ஸ்டைல், பாணிகள் ரசிகர்கள் மத்தியில் அவருக்கு பெரும் செல்வாக்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. தமிழ் நாட்டு அரசியலை அவர் படங்களில் விமர்சிக்கும் முறை, எம்.ஜி.ஆருக்கு பின்னர் மிக அதிகளவில் மக்கள் மதிப்பைப் பெற்ற நடிகர் ரஜனிதான்.



1992க்குப் பின்னர் அவரின் படங்கள் தளபதி, பாட்ஷா, முத்து, எஜமான், அருணாச்சலம், படையப்பா போன்றவை கோடிக்கணக்கில் புரளும் வசூல் படங்களாக அமைந்துள்ளன. 1995க்கு பின் ஆண்டுக்கு ஒன்று எனவும் பின்னர் இரண்டாண்டுக்கு ஒன்று எனவும் கடைசியாக படையப்பாவின் பின்னர் இன்னுமோர் புதிய படத்தை அவர் படைக்கவில்லை. இதற்குப் பலகாரணங்கள் கூறுகின்றார்கள். அதில் ஒன்று அவர் கோடிக்கணக்கில் பணத்தை கண்டுவிட்டார். கோடிக்கணக்கான ரசிகர்கள் மனதில் இடம் பிடித்துவிட்டார். இனி கோடி வேண்டாம் முக்தி ஒன்றே வேண்டும் என்ற நிலையை அடைந்து விட்டார். இன்று இந்த நிலையில் ரஜனி இருக்க கமல் தொடர்ந்தும் புதுமைகளைப் புகுத்தி "ஆளவந்தான்" போன்ற திரைப்படங்களில் நடித்து வருகின்றார்.

கமலும் ரஜனியும் புதியதோர் படத்தில் இணைய முடியுமா? முதலில் இவர்களை இணைத்து படத்தை தயாரிக்கக் கூடிய பணவசதி (இன்றைய நிலவரகணக்கின் படி இந்திய ரூபாய் 5கோடியளவில் தேவைப்படலாம்) படைத்த தயாரிப்பாளர் யார் என்பதில் பிரச்சினை இல்லை. இவர்கள் இருவரும் இணைகின்றார்கள். எனச் செய்தி வரும் அன்றைய தினமே சுளையாக 5கோடியென்ன 10கோடியைக் கொட்டவே பட விநியோகஸ்தர்கள் தயாராக இருக்கின்றார்கள் இவர்கள் இருவருமே தங்கள் மனைவிமார் பெயரில் பினாமி எடுத்து தயாரிப்பாளர்களாகலாம். யார் இவர்கள் படத்தை இயக்க தகுதி படைத்தவர்கள்? கே. பாலசந்தர், கே.எஸ். ரவிகுமார், மணிரத்தினம், ஷங்கர் இவர்கள் நால்வரில் ஒருவருக்கே அந்த வாய்ப்பு கிடைக்கலாம். இதிலும் குறிப்பாக கே.எஸ். ரவிக்குமாருக்கு வாய்ப்புக்கள் அதிகம். இசையமைப்பு ரகுமானுக்கே தனித்திறமையுண்டு என இருவரும் விரும்புவர். கதாநாயகிகளாக இந்தித் திரையுலக தாரகைகளே தெரிவு செய்யப்படுவர். இது குறிப்பாக வியாபார நோக்கத்திற்காக எடுக்கப்படலாம். படத்தின் கதை தான் பிரச்சனைக்குரியதாக அமையலாம். கொஞ்சம் காதல், மிகையான மோதல்கள் என அமையக்கூடும்.


சிறந்த கதையம்சமும், நவீன கலை நுணுக்கங்களும், சிறந்த இசையும் இருவருமே ஒரு சிறு காட்சியில் கூட சோடை போகாத வகையில் இயக்கக்கூடிய சிறந்த இயக்குநரும் இருந்தால் இவர்கள் இணையும் படம் தமிழகத் திரைப்பட வரலாற்றிலேயே எண்ணிப் பார்க்க முடியாத சாதனைகளை வசூலில் படைப்பது நிச்சயம். இருவரும் சிறந்த நண்பர்கள், சிறந்த கலைஞர்கள். சிறந்த வியாபாரிகள், இருவரும் ஒன்று சேர்வதற்கான சாத்தியக் கூறுகள் சாதகமாக அமைந்தால் சினிமா ரசிகர்கள் சினிமாவில் முக்திப் பேற்றை அடையும் பாக்கியத்தைப் பெறுவார்கள்.

**திரை விமர்சகர் தயாள்**

## அழிவின் சுவடுகள்



யுத்தத்தின் கோரவடுக்களுடன் கைதடி பிள்ளையார் ஆலயம்



யுத்தத்தில் சேதமான கைதடியில் உள்ள வீடொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக்கிரட்டீஸ் பதில்கள்

கே. ரவீந்திரக்குமார்
திருகோணமலை.

**13வது அரசியல் திருத்தத்தின் தற்போதைய நிலை என்ன?**

கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்றது. தூசுதட்டவும் அரசுக்கு சக்தியில்லை. மத்தியில் 90க்கு மேல் அமைச்சர்கள் இருக்கும் பொழுது மாகாணங்களில் அதிகாரப் பகிர்வு மணலில் கயிறு திரிக்கும் வேலையே.



எஸ். சுந்தரவதனி
வெள்ளவத்தை,
கொழும்பு–06.

**ஆஞ்சநேயரை சைவ நேயர்கள் வழிபடுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்க்க வழி என்ன?**

புதிது புதிதாக சினிமாவில் நடிகர்கள் வருவதில்லையா? அப்படித்தான் ஆஞ்சநேயரும் இங்கு வருகை தந்துள்ளார். இந்தி நடிகைகளைக் கைதட்டிக் கனவு காணும் இந்த நேயர்கள் ஆஞ்சநேயருக்கு கரம் கூப்புவதால் கெட்டு விடப் போவது எதுவும் இல்லை.

ஆர். ராமராஜன்
நாவலப்பிட்டி.

**ஏழு இலட்சத்திற்கு மேல் இலங்கைத் தமிழர்கள் திரைகடல் ஓடித்திரவியம் தேடச் சென்ற அதேவேளை வன்னியில் தமிழர் ஆதாம் – ஏவாள் காலத்து மக்களைப் போல் வாழ்வது ஏன் ?**

வன்னியில் இருப்பவர்கள் என்ன, வடக்கு கிழக்கில் இருக்கும் எல்லா தமிழர்களுக்குமே திரை கடலிற்கு அப்பால் ஓடத்தான் விருப்பம். வழி கிடைத்தவர் எல்லாம் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கின்றார்கள். வழி இல்லாதவையும் வழி விடப்படாதவையும் தான் அடைபட்டுக் கிடக்கின்றார்கள்.

ஏ. சந்திரலதா
பொகவந்தலாவ.

**லைலா அலி தனது தந்தையின் பெயரைக் காப்பாற்றுவாரா ?**



ஆண்களின் அளவிற்கு குத்துச் சண்டையில் பெண்களின் தொகை இல்லை. பிரேசியரின் மகளுடன்தான் மீண்டும் மீண்டும் சண்டை போடுவது என்றால் அதற்கு லைலா என்ன செய்ய முடியும்.

தீ. விஜயசீலன்
தோனிக்கல், வன்னி.

**இராமரே வாலியை ஒளிந்திருந்து கொன்ற போது புலிகள் ஒளிந்திருந்துகொல்வது எப்படித்தவறாகும்?**

அது தவம்-இது பாவம் கருவியும் செயலும் ஒன்றேயாயினும் என்ன நோக்கத்திற்கு என்பதுவும் இறுதி விளைவு என்ன என்பதுவும் பிரதானம்.


த. தினேஷ்குமார்
மருதானை.

**கார்ல் மார்க்ஸின் கம்யூனிசத்துக்கும் வேதவியாசரின் பகவத் கீதைக்கும் அஸ்திவாரம் ஒன்றுதான் என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா?**

எல்லா ஞானிகளும் அடிப்படையில் மக்களின் உச்ச நன்மையையும் உயர்ந்த பட்ச மகிழ்ச்சியான வாழ்க்கையையுமே கருத்தில் கொண்டுள்ளார்கள். ஆயினும் உலக ரீதியான நன்மை மகிழ்ச்சி என்ற ஒன்றும், ஆன்மீக ரீதியான நன்மை மகிழ்ச்சி என்ற ஒன்றும் என இரண்டு தளங்கள் ஞானிகளுள் இருந்திருக்கின்றன. அந்த வேறுபாட்டை இங்கும் காணலாம்.

கே. ரவிக்குமார்
ஹட்டன்.

**சிட்டிசன் அஜித் இன்னுமோர் கமல் ஆவாரா?**



அதற்கு அவர் இன்னுமோர் 10 வருடம் முன்னணி நடிகராக நின்று பிடிக்க வேண்டும். அத்துடன் லாபம் வருமோ வராதோ தன்கையிலிருந்து காசைப் போட்டு படம் எடுக்கும் துணிச்சலும் வேண்டும்.

என். சுந்தரலிங்கம், கல்முனை.

**ரவூப் ஹக்கீம் எதிர்கட்சிக்கு மாறியது வடக்கிலும், கிழக்கிலும் அல்லலும் முஸ்லீம் மக்களைக் காப்பாற்றுமா?**



முஸ்லீம் மக்கள் இதனை வரவேற்பார்களா, மாட்டார்களா என்பதுதான் முக்கியம். மக்களைக் காப்பாற்றுவதற்காகவா அரசியல்வாதிகள் பாராளுமன்றம் செல்கின்றார்கள். அரசுக்கு எதிராகவே அரசியல் நடத்துவது என்பது இலங்கை முஸ்லீம் மக்களுக்கு ஒரு புதிய விடயமாகும். தென்னிலங்கையில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான ஓர் அலை ஆரம்பமாகியுள்ளது. இந்த அலை ரவூப் ஹக்கீமின் அரசியலைக் காப்பாற்றுமா, மாட்டாதா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ஆர். பாஸ்கரன்
வெள்ளவத்தை, கொழும்பு–06

**இந்திய கிரிக்கெட் அணி சாண் ஏற முழம் சறுக்குகின்றதே?**

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாடுவதைவிட அணியில் இருப்பதுதான் முக்கியம். அவர்களின் விளம்பரத் தொழிலுக்கு அது அவசியம். இந்திய கிரிக்கெட்சபை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு வீரர் மொத்தத்தில் எத்தனை சாண் ஏறினார் எத்தனை முழங்கள் இறங்கினார் என்பதை கணிப்பதில்லை. அவர் பல முழங்கள் இறங்கி சில சாண்கள் ஏறினாலும் அவர் அணியில் இருப்பார். கட்டுப்பாட்டுச் சபையின் கணிப்பில் தான் தவறு உள்ளது.

ஏ. தர்ஷினி
கொட்டாஞ்சேனை.

**உப்பு கருவாடும் ஊற வைச்ச சோறும் பிடிக்குமா? அல்லது கல்யாண சமையல் சாதம் பிடிக்குமா?**

பசியின் அளவையும் இருக்குமிடத்தையும் ஆளின் தரத்தையும் பொறுத்தது. அரசன் மாப்பிள்ளையாக வருவான் என கனவு கண்டு காத்திருக்கும் மச்சானைக் கோட்டை விடலாமா?

**வ.உ.சிக்குப் பின்னர் கப்பலோட்டிய தமிழன் மகேஸ்வரனைப் பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்னவோ?**

வ.உ.சி மக்களின் சுதந்திரத்திற்காக கப்பல் ஓட்டினார். இங்கே மகேஸ்வர வியாபாரி மக்களைச் சுருட்டுவதற்காக கப்பல் ஓட்டுகிறார்.

**கண்ணதாசனின் தமிழ் புலமையில் பிறந்த பாடல்களை தற்போது வரும் கட்டிப்புடிடா பாடல்கள் மறக்க வைத்து விட்டனவே?**



கண்ணதாசனின் பாடல்கள் எதுவும் கம்பனையோ, வள்ளுவனையோ, பாரதியையோ மறக்க வைத்துவிடவில்லை. அது போலவே இதுவும். தலைமுறைக்கு தலைமுறை ரசனைகள் வேறுபடும்.

ஆர். ரத்தினராசா
மட்டக்களப்பு.

**நேபாள அரச வம்சம் அழிந்ததில் ஏதாவது சதிப் பின்னணி இருக்குமோ ?**

பரப்பளவு காணியைப் பிடிப்பதிலேயே சகோதரர்களுக்குள் இத்தனை சதி நடக்கும் பொழுது ஒரு நாட்டின் அரச பதவியைப் பிடிப்பதில் சதி இல்லாமலா இருக்கும். அரசர்கள் மக்களால் மாற்றப்படுவதில்லை. போருக்கும் இப்போது சந்தர்ப்பங்கள் இல்லை. சதி ஒன்றுதான் வழி.

ஏ. சுந்தரராஜ்
அம்பாறை.

**திம்புவுக்கும் ஒஸ்லோவிற்கும் எவ்வளவு தூரம் ?**

திம்புவின் மூன்று வசனங்களின் நீளம் இலங்கையில் வடக்கு கிழக்கின் நீளத்திற்கு சமமானதா அல்லது அதைவிடக் கூடுதலானதா என ஒஸ்லோ என்ன மாதிரி அளந்து தீர்மானிக்கிறதோ அந்தளவு தூர இடைவெளி.

இ. சுந்தரமூர்த்தி
[illegible]

**[illegible] கட்டணிக்கும் தமிழ் இனத்திற்கும் சர்வதேச ரீதியில் ஆற்றிய பணியை தற்போது யார் செய்வார்கள்?**



அப்படி செய்ய முற்பட்டவர்கள் எல்லாம் கொல்லப்பட்டு விட்டார்கள். கொல்லப்படுவோமோ என்ற பயத்தில் யாரும் முன்வரவும் மாட்டார்கள்.

க. சந்திரமதி
பள்ளிமுனை.

**ஜெயலலிதா முதலமைச்சராக நிலைக்க முடியுமா?**

அவர் முதலமைச்சர் ஆவதை இந்திய ஜனாதிபதியாலும் தடை செய்ய முடியவில்லை. அதை யாரும் இன்னமும் உச்ச நீதி மன்றத்துக்கும் எடுத்துச் செல்லவில்லை. தேர்தல் ஆணையாளர் அவர் தேர்தலில் போட்டியிடுவதை மீண்டும் மீண்டும் தடுத்தாலும் கூட ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய ஆள் ஒருவரை ஆறு மாதத்திற்கு ஒரு தடவை ஒரு நாள் முதலமைச்சராக இருத்தி அவர் ஐந்து ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடாமலேயே ஆட்சி செய்யமுடியும்.

சி. சிவராமலிங்கம்
வாழைச்சேனை.

**புலித்தோல் போர்த்திய பசுக்கள் இன்றும் உலா வருகின்றனவா?**

புலித் தோல் போர்த்தினால் தாங்கள் மற்றவர்களைக் கறக்கலாம் என்ற நிலை இருக்கும்வரை மானம், ரோசம், நேர்மை உள்ள மிருகங்களைத் தவிர மற்றவை எல்லாம் புலித்தோல் போர்த்தி உலாவரும்.

எஸ். விசுவலிங்கம்
சமயபுரம்.

**ரஷ்யாவில் நாஸி ஆக்கிமிப்பு எந்தளவு தூரம் அதனை பாதித்தது?**

இரண்டு கோடி ரஷ்ய மக்களைப் பாதித்தது. மொஸ்கோவின் எல்லைவரை வந்து அச்சுறுத்தியது. ஆனால் அதுவே ஹிட்லரின் முடிவுக்கும் வழி சமைத்தது.

நீ. அந்தோனிப்பிள்ளை
பேசாலை.

**தமிழ் சினிமாவில் தமிழ் பேசும் கதாநாயகிகள் சுப்பர் ஹீரோயின்களாக வருவதில் என்ன தடைகள் நிலவுகின்றன?**

ஹிந்தியில் மாதுரி திக்சித், தெலுங்கில் விஜயசாந்தி போல தமிழில் யாரும் இதுவரை வரவில்லை. எம்.ஜி. ஆர். சிவாஜி தொடக்கி வைத்த பாரம்பரியம் இன்னும் தொடர்கின்றது. சினிமாவில் வராவிட்டாலும் அரசியலில் வந்துள்ளார்கள் தானே.



அ. அல்ஹாதீன்
அம்பாறை.

**நோர்வேத் தூதுவர் எரிக் சொல் ஹெயிமை ஓரம் கட்டியது ஏனோ?**

இலங்கையின் இனப்பிரச்சினையை புரிந்துக்கொள்வதற்கு முதல் அவர் இலங்கை அரசுக்கும் நோர்வே அரசுக்கும் இடையேயுள்ள உறவுகளின் யதார்த்தங்களைப் புரிந்திருந்தால் ஓரம் போகாமல் இருந்திருக்கலாம்.

நா. தயாலசீலன்
யாழ்ப்பாணம்.

**தமிழ் சினிமா நாயகனும் சூப்பர் ஸ்டார் ரஜனியும் இணைந்து நடிக்கும் படம் விரைவில் தயாரிக்கப்படும் என பேச்சுக்கள் அடிபடுகின்றனவே உண்மையா?**



தெனாலி பட விழாவில் அப்படித்தான் இருவரும் கூறினார்கள். இருவரும் இணைந்து வர்த்தக ரீதியான படம் ஒன்றை எடுத்தால் அது பழைய சாம்பாராகத்தான் இருக்கும். வர்த்தகத்தை மறந்து கலைத்திறன் மிக்க படம் ஒன்றை எடுக்கத் துணிவார்களாயின் அது தமிழ் திரை உலகிற்கு சாதனை ஒன்றை வழங்கக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளபதி முஷாரப்! ஜனாதிபதி!! ....?


**1947ம்** ஆண்டு சுதந்திரமடைந்த பாகிஸ்தான் குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. 1956 இல் மிர்ஸா அவர்கள் அப்போதைய ஜனாதிபதியாக விளங்கினார் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பங்களினாலும், ஊழல்களினாலும் 1958 ஒக்டோபரில் மிர்ஸா



தலைமையிலான அரசாங்கம் விலக்கப்பட்டு, பாகிஸ்தானின் அரசியல் யாப்பு ரத்து செய்யப்பட்டு, புதிய ஜனாதிபதியாக இராணுவத்தலைவர் ஜெனரல் முகமது ஆயூப்கான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பிரதம மந்திரி என்னும் பதவியும் இல்லாதொழிக்கப்பட்டது. ஜெனரல் முகமது ஆயூப்கான் தொடர்ந்து 1969வரை தனது சர்வாதிகாரத்தின் மூலம் ஆட்சி செய்து வந்தார். 1969 காலப்பகுதியில் ஏற்பட்ட கலவரங்களினால் ஆயூப்கான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலக, புதிய ஜனாதிபதியாக பாகிஸ்தானின் இராணுவத் தலைவர் ஜெனரல் அஹா முகமது யஹ்யா கான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவரால் தொடர்ந்து இராணுவ ஆட்சியை எடுத்துச் செல்ல முடியவில்லை. முஜிபூர் ரஹ்மானின் தலைமையில் அமைந்த அவாமி லீக்கின் ஆட்சியை ஏற்பதற்கு மேற்குப் பாகிஸ்தான்காரர்கள் தயாராக இல்லாதபடியால் கிழக்குப் பாகிஸ்தான் தனிநாடாகும் நிலை ஏற்பட்டது. உள்நாட்டு போர் மூண்டு கிழக்கு பாகிஸ்தான் சுதந்திர நாடாக "பங்களாதேஷ்" என உருவாகியது. இதன் தொடர் விளைவாக இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டு பாகிஸ்தானின்



புதிய ஜனாதிபதியாக சுல்பிகார் அலிபூட்டோ தேர்வானார். அலி பூட்டோ பாகிஸ்தானின் புதிய அரசியல் யாப்பினை ஆக்கி 1973 இல் அறிமுகம் செய்தார்.

புதிய அரசியல் சட்டத்தின் பிரகாரம் 1977இல் நடைபெற்ற தேர்தலில் பூட்டோ வெற்றி பெற்ற போதிலும் அத்தேர்தல் பெருத்த சர்ச்சைகளை உருவாக்கியது. இதனால் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே மோதல்கள் தோன்றின. இப்பிரச்சினைகளில் சமாதானம் ஏற்படாத காரணத்தினால் இராணுவம் தலையிட்டு ஜனநாயக அரசைக் கவிழ்த்துவிட்டது.

இராணுவத் தலைவர் ஜெனரல் முகமது ஜியா உல்-ஹக் நாட்டின் தலைவரானார். அலி பூட்டோ மீது கொலை வழக்குத் தொடரப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு, மன்னிப்பு எதுவுமின்றி இரவோடு இரவாக பூட்டோ சியா உல் ஹக்கினால் தூக்கிலிடப்பட்டார்.

11ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்த ஜியா-உல்-ஹக் 1989இல் மர்மமான முறையில் விமானம் வெடித்த விபத்தில் பலியானார். இவரின் மறைவைத் தொடர்ந்து பாகிஸ்தானில் ஜன

## மக்கள் விழிப்பாக இல்லாவிடின் ஜனநாயகம் விலகிவிடும்



நாயக அரசியல் கட்சிகளின் தலைவர்களான பெனசீர் பூட்டோ, நவாஸ் ஷெரீஃப் ஆகியோர் தேர்தல்கள் மூலம் பிரதம மந்திரிகளாகப் பொறுப்பேற்று ஆட்சி செய்தனர். ஆயினும் இவர்கள் இருவரின் மீதும் பலத்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டது. அமைதியற்ற ஆட்சிகளையே நடாத்தினர்.

ஒக்டோபர் 1999இல் இடம்பெற்ற இரத்தம் சிந்தா இராணுவப் புரட்சி மூலம் தற்போதைய ஜெனரல் முஷாரஃப் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றினார். ஜெனரல் முஷாரஃப்பை இராணுவத் தளபதி பொறுப்பில் இருந்து திடீரென நீக்கிவிட்டு தனது உறவினர் ஒருவரை அப்பதவிக்கு அமர்த்த அன்றைய பிரதமர் நவாஷ் ஷெரீஃப் முற்பட்டார். இராணுவத்தின் ஒத்துழைப்பு இல்லாமையால் இராணுவத்துக்குள் அவர் மேற்கொண்ட சதி நடவடிக்கை அவருக்கு எதிராகவே திரும்பியது.

கராச்சியில் தொடர்ந்த இனக்கலவரங்கள், நீதித்துறை நவாஷ் ஷெரீஃப்பின் நடவடிக்கைகள் மீது அதிருப்தி கொண்டிருந்தமை, நவாஷ் ஷெரீப் பின் ஊழல்களால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த எதிர்ப்புக்கள், பெனாஷிர் பூட்டோ மற்றும் அவரது கணவர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விசாரணைகள் [illegible] தண்டனைகள் எனத் தொடர்ந்ததனால் எதிர்க்கட்சிகளின் வெறுப்பையும் சம்பாதித்தமை எனப் பல கோணங்களில் நவாஷ்ஷெரீஃப் தானாகவே தனக்கெதிரான விரோதங்களை அதிகரித்துக் கொண்டிருந்தார். இதையெல்லாம் ஜெனரல் முஷாரஃப் தனது இராணுவச் சதியின் வெற்றிக்கும் அதனை நியாயப்படுத்துவதற்கும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

ஜெனரல் முஷாரஃப் ஆட்சியைக் கைப்பற்றியதும் தான் ஜனநாயகத்தையும், சட்டம் ஒழுங்கையும், நீதி நியாயங்களையும் நிலைநாட்டுவதற்காகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றதாகக் கூறினார். பதவியைப் பிடித்த ஜெனரல் முஷாரஃப் தன்னை உடனடியாக ஜனாதிபதி எனப்பிரகடனம் செய்யவில்லை. உயர் நிறைவேற்று அதிகாரி என்றே தனக்குப் பெயரிட்டுக் கொண்டார். அன்று ஏற்பட்ட சர்வதேச எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான தந்திரமாகவே அப்படிச் செய்தார் என்பது இப்போது தெளிவாகின்றது.

நீண்ட காலங்களுக்கு அந்தப் பதவியில் இருக்கப் போவதில்லை என்றும், சில மாதங்களுக்குள் நியாயமான பொதுத்தேர்தலை நடாத்தி முறைப்படி ஜனநாயக பூர்வமான ஆட்சியை நிலை நாட்டப் போவதாகக்கூறினார். பின்னர் படிப்படியாக சீனாவும், இஸ்லாமிய நாடுகளும் அவரை அங்கீகரித்தன.



குஜராத் பூகம்பத்தின் பின்னர் முஷாரஃப் முதல் ஆளாக இந்தியாவுக்கு உதவிக்கரம் நீட்டியதன் மூலம் இந்தியா கொண்டிருந்த வெறுப்பைக் கரைத்து விட்டார். கடைசியாக இந்தியாவும் அவரை இந்தியாவுக்குவரும் படி அழைப்பு விடுத்து மறைமுகமாக அங்கீகரித்து விட்டது.

இப்போது அவர் தன்னைத் தானே ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்துள்ளார். உத்தியோக பூர்வமாக தலைமை நீதிபதியினால் ஜனாதிபதி என மூன்றாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். [illegible] தேர்தல் [illegible] பிரதம மந்திரி தெரிவு செய்யப்பட்டாலும் முஷாரஃப்பே தொடர்ந்தும் சர்வ வல்லமை மிக்க ஜனாதிபதியாக ஆட்சி நடாத்துவார் என்றே தெரிகின்றது.

பாகிஸ்தானின் ஜனாதிபதியாகவே ஜெனரல் முஷாரஃப் இந்தியா இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்புக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

பாகிஸ்தானில் உள்ள ஜனநாயகக் கட்சிகளில் ஒன்றின் தலைவரான நவாஸ் ஷெரீஃப் ஏற்கனவே அரசியல் பேசமுடியாத அகதியாக சவூதி அரேபியாவில் தஞ்சம் பெற்றுள்ளார். அவர் நாடு திரும்பமுடியா அளவுக்கு ஏற்கனவே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றார். மேலும் பல ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை மற்றுமோர் ஜனநாயகக் கட்சியின் தலைவரான பெனாஷீர் பூட்டோ தற்போது இங்கிலாந்து நாட்டில் தனது குடும்பத்துடன் தஞ்சம் புகுந்திருக்கிறார். அவருக்கும் நாடு திரும்பவழியில்லை. அவரது கணவன் பாகிஸ்தான் சிறையில் தண்டனையை அனுபவித்து வருகின்றார்.

பாகிஸ்தான் மக்கள் மத்தியில் ஜனநாயகத்தின் மீது உணர்வு பூர்வமான ஈடுபாடு உண்டென்றோ அல்லது அது தங்களுக்கு அவசியம் என்று கருதுகின்றார்கள் என்றோ கூற முடியாது. இராணுவப் புரட்சியை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பெனாஷீர் பூட்டோவும் மற்றும் பல பாகிஸ்தான் தலைவர்களும் வரவேற்றார்கள். பாகிஸ்தானின் பத்திரிகைகளிலோ அல்லது அந்நாட்டின் புத்திஜீவிகள் மத்தியிலிருந்தோ இராணுவ ஆட்சிக்கு எதிராக பெரும் எதிர்ப்பு அலைகள் எதுவும் தோன்றவில்லை.



இத்தகைய சூழ்நிலையில் பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகம் திரும்புவதற்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம். அதுவரை ஜெனரல் முஷாரஃப்பும் அவரது இராணுவ வாரிசுகளுமே தொடர்ந்து ஆட்சி செய்வார் என நம்பவே இடமுண்டு. இன்றைய உலகில் நாடுகளின் அரசியலில் நல்லது கெட்டது எது? சரியானது பிழையானது எது? என்பதைவிட ஒரு தேசத்தின் அல்லது ஒரு சமூகத்தின் அரசியலில் ஈடுபாடுடையவர்களாக இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் எதை விரும்புகிறார்களோ, வெளிப்படுத்துகிறார்களோ அதுவே ஆட்சிமுறையாக அமைகின்றது.

எனவே பாகிஸ்தான் மக்களில், கட்சிகளின், புத்திஜீவிகளில் பெரும்பான்மையினர் எப்போது எல்லாக்காரணங்களுக்கும் அப்பால் இராணுவ ஆட்சிமுறையை வெறுக்கிறார்களோ, எதிர்க்கிறார்களோ அப்போதுதான் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நிரந்தர முடிவுக்குவரும்.

**-நாராயணன்-**



தியாகிகள் தினத்தன்று வட்டுக்கோட்டை வயோதிபர் இல்லத்தில் மதிய போசனம்




தியாகிகள் தினத்தன்று மட்டுநகரில் அமைக்கப்பட்ட தாகசாந்தி நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கட் களத்தில் இந்தியா இலங்கை மோதல்

இந்த மாதம் இலங்கை வரும் இந்திய கிரிக்கெட் அணி உபகண்டத்தில் (இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ்) பல கோடிக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. உலக அரங்கில் தற்போது நிலவும் திறமைகளின் அடிப்படையில் இரண்டு நாடுகளுமே சம நிலையிலுள்ளன. இலங்கையிலுள்ள ஆடுகளங்கள் இந்திய வீரர்களுக்கு பெரியளவில் பிரச்சினைகளைத்தரப்போவதில்லை. இந்தியாவிலும் இதேபோன்ற ஆடுகளங்கள்தான் உள்ளன.



இரண்டு அணிகளிலும் துடுப்பாட்ட வீரர்கள் சமமான திறமைகளுடன் இருந்தாலும் இந்திய நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்காரின் வருகையில் உள்ள சந்தேகம் இந்திய அணியில் பிரகாசத்தை கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது.

இந்திய அணியின் வெற்றி பெருமளவில் துடுப்பாட்டத்திலேயே தங்கியுள்ளது.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில் தங்கள் சொந்த மண்ணில் விளையாடும் பொழுது யாருக்கும் சளைத்தவர்களல்ல. இலங்கை அணியில் சனத்ஜெயசூரியா, அத்தபத்து, ஜெயவர்த்தனா அனுபவமிக்க துடுப்பாட்ட வீரர்கள். இவர்களுடன் ஆர்னல்ட், சங்ககார, களு, டில்சான், இந்திக்கா போன்றவர்கள் தாய் மண்ணில் சிறப்பாக துடுப்பாடக்கூடியவர்கள்.



ஆனால் இலங்கை அணியில் அரவிந்த டி சில்வா இடம் பெறுவது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. அரவிந்த ஒரு காலகட்டத்தில் சச்சினிற்கு இணையாகவே இருந்தவர். அவரின் துடுப்பாட்டத் திறமை இன்னமும் மழுங்கிவிடவில்லை. இலங்கை அணியில் அரவிந்த சேர்க்கப்பட்டிருந்தால் இலங்கையின் துடுப்பாட்டம் உச்சமாக இருந்திருக்கும். எனினும் இன்னமும் இலங்கை வெற்றி வாய்ப்புக்கள் குறைவென்று கூறமுடியாது.



இந்திய அணியின் வெற்றியை நிர்ணயிப்பவர்கள் கங்குலி, மற்றும் லக்ஷ்மண் என்றால் இலங்கை அணியின் வெற்றியை நிர்ணயிப்பவர் முரளியாகவே இருப்பார். முரளி, சமிந்த வாஸ், தர்மசேனா போன்ற அனுபவமிக்க பந்து வீச்சாளர்கள் இலங்கை வசம் இருந்த போதிலும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களை 5 நாட்களுக்குள் இரண்டு தடவைகள் வீழ்த்துவது சிரமமான ஒரு சாதனையாகவே அமையும். அவர்களுக்கு இலங்கைத் தளங்களும் வேற்றானவையல்ல.

இந்திய அணியில் சச்சினை விட, டிராவிட், கங்குலி, லக்ஷ்மன், ரமேஷ், தாஸ் போன்ற திறமையான துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். இவர்களுடன் இந்திய அணியின் பந்து வீச்சாளர்கள் சாஹுர் கான், ஹர்பன்சிங், சிறீநாத் போன்றவர்கள் சிறப்பாக விளையாடும் பொழுது இந்திய அணி வலுவான நிலையினை அடையக்கூடும்.

1982ம் ஆண்டுதன் கிரிக்கெட் டெஸ்ட் அந்தஸ்தை பெற்ற இலங்கை அணி தனது முதலாவது டெஸ்ட் வெற்றியை தனது சொந்த மண்ணிலேயே அதுவும் இந்தியாவிற்கு எதிராகவே 1986ல் பெற்றுக் கொண்டது. அந்தக் காலகட்டத்தில் இந்திய அணியின் தலைவராக கபில்தேவும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கவாஸ்கரும் இருந்தனர்.



ஆனால் இலங்கை அணி தனது முதலாவது வெற்றியைப் பெற்றுக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் இந்திய அணியின் தலைவர் கபில்தேவ் பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்த கருத்துக்கள் இன்னமும் எதிரொலிக்கின்றன. அவர் கூறியது இதுதான். "இலங்கை அணி தனது தாய் நாட்டில் மட்டுமே இத்தகையதோர் வெற்றியைப் பெறமுடியும்.

ஆனால் இலங்கை மண்ணிற்கு வெளியே இலங்கை அணி வெற்றி பெறுவது இயலாத காரியம்" என்று கூறினார். ஆனாலும் இது நடந்து 10 ஆண்டுகளுக்குள் இலங்கை பல டெஸ்ட் போட்டிகளை வென்றது மட்டுமல்லாது, ஒருநாள் மட்டுபடுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் உலக சாம்பியனாகவே வந்தது.

இவ்விரு அணிகளும் மோதும் பொழுது யார் வெல்லுவார்கள் என்று முன்கூட்டியே சொல்ல முடியாது. ஆனாலும் ஒன்று மட்டும் உறுதி. கங்குலியும், முரளியும் மோதுவதில் யார் வெல்கின்றார்களோ அவர்கள் சார்ந்த அணி வெற்றிக்கனியைப் பறிப்பது நிச்சயமான உண்மையாகும்.

இதற்கிடையில் ஓய்வில் இருக்கும் சச்சின் சேர்ந்துகொண்டால் வெற்றியைத் தீர்மானிப்பது அவரது விளையாட்டாகவே இருக்கும்.

**தயாளன்**

## இந்தியா இலங்கை இதுவரை நடந்த போட்டிகளின் முடிவுகள்

| தொடர் ந.பெ. ஆண்டு | தொடர் ந.பெற்ற நாடு | போட்டிகள் | இந்தியா வென்றவை | இலங்கை வென்றவை | வெற்றி தோல்வியின்றி டராவில் | தொடரை வென்ற நாடு |
|---|---|---|---|---|---|---|
| 82/83 | இந்தியா | 01 | -- | -- | 01 | சமன் |
| 85/86 | இலங்கை | 03 | -- | 01 | 02 | இலங்கை |
| 86/87 | இந்தியா | 03 | 02 | -- | 01 | இந்தியா |
| 90/91 | இந்தியா | 01 | 01 | -- | -- | இந்தியா |
| 93/94 | இந்தியா | 03 | 03 | -- | -- | இந்தியா |
| 93/94 | இலங்கை | 03 | 01 | -- | 02 | இந்தியா |
| 97/98 | இலங்கை | 02 | -- | -- | 02 | சமன் |
| 97/98 | இந்தியா | 02 | -- | -- | 02 | சமன் |
| 98/99 | இலங்கை | 01 | -- | -- | 01 | சமன் |
| இதுவரை இந்தியா ந.பெற்ற.போ. முடிவுகள் | | 10 | 06 | -- | 04 | |
| இதுவரை இலங்கை ந.பெற்ற.போ. முடிவுகள் | | 09 | 01 | 01 | 07 | |
| மொத்தம் | | 19 | 07 | 01 | 11 | |

## கிரிக்கெட் டெஸ்ட் தொடர்களில் நாடுகளின் நிலைகள்

சர்வதேச கிரிக்கெட் சபையினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உலக நாடுகளிடையே கடந்த ஐந்து வருடங்களுள் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளின் முடிவுகளைக் கொண்டு நாடுகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் அவுஸ்திரேலியா முதலிடத்திலும் இலங்கை நான்காவது இடத்தையும் பெற்றுள்ளன. இலங்கை வரும் இந்திய அணி ஏழாவது இடத்திலேயே உள்ளது.

| நிலை | நாடுகள் | விளையாடிய போட்டிகள் | வெற்றி பெற்றவை | தோல்வி அடைந்தவை | ட்ராவில் முடிந்தவை | புள்ளிகள் | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | அவுஸ்திரேலியா | 13 | 10 | 02 | 01 | 21 | 1.62 |
| 02 | தென்னாபிரிக்கா | 15 | 10 | 03 | 02 | 22 | 1.47 |
| 03 | இங்கிலாந்து | 14 | 07 | 05 | 02 | 16 | 1.14 |
| 04 | இலங்கை | 13 | 05 | 05 | 03 | 13 | 1.00 |
| 05 | நியூசிலாந்து | 15 | 06 | 07 | 02 | 14 | 0.93 |
| 06 | மேற்கிந்திய தீவுகள் | 12 | 05 | 06 | 01 | 11 | 0.92 |
| 07 | இந்தியா | 13 | 03 | 06 | 04 | 10 | 0.77 |
| 08 | பாகிஸ்தான் | 15 | 03 | 07 | 05 | 11 | 0.73 |
| 09 | சிம்பாப்வே | 13 | 02 | 09 | 02 | 06 | 0.46 |
| 10 | பங்களாதேஷ் | 01 | 00 | 01 | 00 | 00 | --- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regd. in the Dep. of Posts of Sri Lanka under (No: QD / 41 / News / 2001)





கடந்த 19-06-2001 தியாகிகள் தினத்தை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற இரத்ததான வைபவத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர் சுபத்திரன் (றொபேட்) அவர்கள் இரத்த தானம் வழங்கினார். அதைத் தொடர்ந்து பல தோழர்களும் இரத்த தானம் செய்தனர்.

# அஞ்சலி


மட்டுநகரில் நடைபெற்ற தியாகிகள் தின நிகழ்ச்சியில் அன்னையர்கள் ஆராதனை.







**மேலே:-** தெல்லிப்பளை பேரம்பலம் வைரவர் கோயில் வேள்விக்கு ஆடுகள் அழைத்துச் செல்லப்படுகின்றன.

**கீழே:-** வேள்விக்கான படையல்





அளவெட்டி கவணாவத்தை வைரவர் கோயில் வேள்வி ஆடு வெட்டி பலியெடுப்பு



திருமலையில் தியாகிகள் தினத்தன்று தோழர் சின்னத்துரை (சிவம்) சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குகின்றார்.



**இடம் :-** மட்டு-அம்பாறை பிராந்திய செயலாளர் ஆர். துரைரத்தினம் உரையாற்றுவதையும். கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் ஒருபகுதியினரையும் படத்தில் காண்கிறீர்கள்.

**கீழே:-** வவுனியாவில் தோழர் சிவம் ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு உதவிப்பொருட்களை வழங்குகின்றார்.





தோழர் க. ஞானதாஸ் (சிவம்) தலைமையில் 50க்கு மேற்பட்ட தோழர்கள் இரத்த தானம்

# கௌரவிப்பு





தியாகிகள் தினத்தன்று யாழ், ஈ.பி.ஆர்.எல்.எவ் காரியாலயத்தில் நடைபெற்ற தியாகிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சியில் தோழர் த. சுபத்திரன் தியாகிகளின் பெற்றோர்களுக்கு உடுபுடவைகளை கையளிக்கிறார். அருகில் தோழர் மோகனும், தோழர் கங்காவும்.

# உள்ளூர் மீனவர்களின் உரிமைக்காக




கல்லடி, முகத்துவாரம், நாவலடி, பூநொச்சி முனை, காத்தான்குடி கடற்பரப்பில் இரவு பகலாக பாரிய மீன்பிடி படகுகளின் உதவியுடன் வெளியார் கடலட்டை, கலர் மீன் பிடிப்பதில் ஈடுபடுவதால் இப்பகுதிகளில் பரம்பரையாக தொழில் செய்து வந்த 1000 குடும்பங்கள் நிர்க்கதிக்கு உள்ளாகி உள்ளன இதை எதிர்த்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி தோழர் கே. பத்மநாதன் (மதன்) தலைமையில் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் 141A, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினபிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது